|| श्रीः ||

# || श्रीकामकोटिप्रदीपः ||

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

மலர் 13 · சோபகிருது ௵ தை - மாசி ௴ பிப்ரவரி 2024 · இதழ் 2



ஸ்ரீ காஞ்சி காமகோடி
பீடத்தின் சார்பில்
வெளியிடுவோர் :
**ஸ்ரீ காமகோடி**
**கோஶஸ்தானம்**



# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## தை - மாசி 2024

மலர் 13 பிப்ரவரி 2024 இதழ் 2

பொருளடக்கம்




| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 5 |
| தெய்வத்தின் குரல் | 7 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 9 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 15 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| ஸ்ரீஸதாசிவ ப்ரம்மேந்திரரின் கீர்த்தனைகள் | 19 |
| தாயுமான சுவாமிகளும், அத்வைத நிலையும் | 20 |
| ராஜ தரங்கிணி | 23 |
| ஆசார்ய பாதுகா ப்ரதிஷ்டை | 26 |
| முகாம் நிகழ்ச்சிகள் | 29 |
| மாசி மாத விசேஷ தினங்கள் | 33 |
| அத்வைத ஆசார்ய பரம்பரை | 34 |
| ப்ரபோத சிந்தாமணி | 38 |
| சாணக்ய ஸுபாஷிதம் | 39 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி | 41 |
| வேதாந்த ஸம்வத்ஸரம் | 43 |
| மகாபாரத சுருக்கம் | 45 |
| முக ஸாரம் | 47 |




भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்

## ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா

வெளியிடுவோர் :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com

சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |

Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை
# प्रार्थना

*பவமான ஸோமனே ! மகத்தான உணவே ! நீ தேவர்களை பூஜிக்கவும், அரக்கர்களை அழிக்கவும். எங்களை மேம்படுத்தவும். ஸோமனே ! எங்களுக்கு ஒளியயை அளிக்கவும், ஸ்வர்க்கத்தையும், எல்லா ஸௌபாக்யத்தையும் அளிக்கவும், எம்மைச் செம்மைப்படுத்தவும்.*

*ஸோமனே ! எமக்கு ஆற்றலை அளிக்கவும், அறிவை அளிக்கவும், பகைவர்களை அழிக்கவும், எம்மை மேன்மைப்படுத்தவும், இந்த்ரனின் பானத்துக்காக ஸோமத்தை சுத்தப்படுத்துங்கள், சுத்தப்படுதுபவர்களே ! எங்களை மேம்படுத்தவும்.*

*ஸோமனே! உனது அறிவாலும் பாவனைகளாலும் எங்களைச் சூரியனுக்குச் செலுத்தவும், எங்களை மேம்படுத்தவும்.*

*- ரிக் வேதம் மண்டலம் 9*

***அபராத ஸஹஸ்ராணி க்ரியந்தே அஹர்நிசம் மயா***
***தாஸோ அயமிதி மாம் மத்வா க்ஷமஸ்வ பரமேஸ்வரீ ।। 1***

*ஹே பரமேஸ்வரீ இரவு பகலாக ஆயிரக்கணக்கான குற்றங்களைச் செய்கிறேன். இவன் என் தாஸன் என்று நினைத்து பொறுத்துக் கொள்ள வேண்டும்.*

***ஆவாஹனம் ந ஜானாமி ந ஜானாமி விஸர்ஜனம்***
***பூஜாம் சைவ நா ஜானாமி க்ஷம்யதாம் பரமேஸ்வரீ ।। 2***

*உன் பூஜையில் பரமேஸ்வரி உன்னை எப்படி அழைப்பது என்று அறியேன். உன்னை உன் இடத்தில் செல்ல வைப்பது என்று அறியேன். பூஜை செய்ய வேண்டிய முறையும் அறியேன். தாங்கள் இவைகளைப் பொறுத்தருள வேண்டும்.*

***மந்த்ரஹீனம் க்ரியாஹீனம் பக்திஹீனம் ஸுரேஸ்வரீ***
***யத்பூஜிதம் மயா தேவி பரிபூர்ணம் ததஸ்து தே ।। 3***

*ஹே ஸுரேஸ்வரீ! நான் செய்யும் பூஜையில் மந்த்ரம், க்ரியை, பக்தி இவைகளின் குறை இருந்தாலும் அவைகளைப் பூர்ணமாக்கி அருள் செய்.*

*அபராத ஸதம் க்ருத்வா ஜகதம்பேதி ச உச்சரேத்*

*யம் கதிம் ஸமவாப்னோதி ந தாம் ப்ரம்மாதய ஸுரா: ।। 4*

*நூற்றுக்கணக்கான அபராதங்களை ஒருவன் செய்தாலும் ஹே ஜகதம்பே! என்று கூறிவிட்டால் அவன் எந்த போக போஜ்யங்களை அடைவானோ அவைகளை ப்ரம்மாதிகளாலும் கூட அடைய முடியாது.*

**- தேவி க்ஷமாபன ஸ்தோத்ரம்.**

## வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்

## VEDA RAKSHANA NIDHI TRUST

**ICICI Bank** : T. Nagar, Chennai 17, A/C. No. 602 601205 431

**IFSC Code** : ICIC 0006026

**Bank of Baroda** A/C No : 05320100002089 IFSC CODE barb0chenbs

**Indian Bank :** West Mambalam Branch A/C. No. 418622532 IFSC IDIB 000w005

**Canara Bank :** West Mambalam Branch A/C No. 0917101041732

IFSC CNRB 0002616

**Indian Bank** : Mutt Branch, Kancheepuram

A/C No. 411552514 IFSC IDIB b0005085

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
செலுத்துபவர் அவருடைய PAN No ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம்,
செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.

வேத ரக்ஷண நிதிக்குப் பணம் அனுப்புவர்கள் விவரத்தை கீழ்கண்ட
இ. மெயிலுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

Vrnt e.mail : office@vrnt.org <mailto:office@vrnt.org> Phone : 24740549

# ஆசிரியர் பக்கம்

## *மீண்ட சொர்கம்*

*இரண்டாயிரம் வருடங்கள் பழமையானதும், யுத்ததினால் வெல்ல முடியாததாகவும், சுமார் ஐநூறு வருடங்களாக இடிக்கப்பட்டும், சிதைக்கப்பட்டும், மீண்டும் மீண்டும் புனர் உத்தாரணம் செய்யப்பட்டும், வழக்குகளில் இழுக்கப்பட்டும், வீண் வாதப் ப்ரதி வாதங்களில் மாட்டிக் கொண்டதும், 'ராமன் யார்'' என்று கேள்வி கேட்கப்பட்டும், பல விதமான மிரட்டல்கள் இடையே இந்த ராமனுக்கு அவனுடைய ஜன்ம ஸ்தானத்தில் இடம் கிடைக்குமா என்று ராம பக்தர்கள், ஆஸ்தீகர்கள் மனதில் எழுந்த ஆதங்கமாயிருந்ததுமான அந்த அயோத்தியும் , சக்ரவர்த்தி திருமகனான ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தியும் ஜனவரி 22ஆம் தேதி கும்பாபிஷேகத்தை ஸ்வீகரித்து அனைத்து பாரத மக்களின் மனதில் நிம்மதியை அனுக்ரஹித்தார்கள்.*

*இந்த நிகழ்ச்சிக்குக் காரணமான மத்ய அரசையும் பாரதப் ப் ரதமர் ஸ்ரீ மோடியையும் மனமுவந்து பாராட்டுகிறோம். மாபெரும் சாதனையைச் செய்திருக்கிறார். இதை அரசியலாகப் பார்க்காமல் நமது கலாசாரமாகப் பார்த்தல் நலம். **'ராம நீ ஸமானமெவரு'** என்ற அந்த ராமனுக்குக் கும்பாபிஷேகம் . வால்மீகியின் இஷ்ட நாயகனுக்கு பெரும் விழா.*

*தர்ம நாயகனுக்குப் பெரும் விழா. ஸத்ய ஸந்தனுக்குப் பெரும் விழா. தன் தர்மத்தையும், லோக தர்மத்தையும் ரக்ஷித்த ஸ்ரீ ராமனுக்குப் பெரும் விழா. பாபர் இக்கோவிலைத் தகர்த்த நாள் முதல் கிட்டத்தட்ட 25 தலை முறை பலிகள், த்யாகம் அர்பணிப்பு ஆகியவற்றைக் கண்டுள்ளது. இன்னுயிர் நீத்தவர்கள் பலர். விஸ்வ ஹிந்து பரிஷத்தின் மூலம் இது ஓர் இயக்கமாக மாறி பல கோடி ராமபக்தர்கள் இதற்காக உழைத்தார்கள். நிதியும் வந்து குவிந்தது. நீதி மன்றங்கள் வாயிலாகவும் தொல்லியியல் ஆதாரங்களுடனும் மீண்டும் ராம ஜன்ம பூமி அனைவருக்கும் கிடைத்தது. இதில் பங்கேற்ற அனைவருக்கும் நமது வணக்கங்கள்.*

*அன்று வால்மீகியின் அயோத்தியை மிஞ்சுகிறது இன்றைய அயோத்யை. மாபெரும் சாலைகள், எப்போதும் புஷ்பித்திருக்கும் பூங்காக்கள், வானை முட்டும் கோபுரங்கள், எப்போதும் உல்லாஸமாயிருக்கும் நகரம், பல நாட்டு வணிகர்கள் கூடும் இடம், பல யோஜனை நீளம், அகலம் உடையது என்று வர்ணிக்கப்பட்ட அயோத்தி இன்று 57400 சதுர அடிகளிலும் 360 அடி நீளம், 235 அடிகள் அகலம், 161 அடிகள் உயரம், மூன்று தலங்கள், ஐந்து மகா மண்டபங்கள் உடைய ராமர் ஆலயத்தைத் தாங்கி நிற்கிறது.*

*ஜனவரி 22ஆம் நாள் அபிஜித் முஹூர்த்ததில் வேத பண்டிதர்கள் வேதம் ஒலிக்க ஸத்யபுத்ரனும், தர்மாத்மாவும் சக்ரவர்த்தி திருமகனான ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்திக்கு கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடை பெற்றது. காணக் கண் கோடி வேண்டும். தன் தர்மத்தையும், அனைவரின் தர்மத்தையும் காக்கும் ராமனுக்கு கும்பாபிஷேகம் நடை பெற்றது. பல கோடி மக்கள் இதை கண்டு ரசித்தனர். அங்கு போக முடியாதவர்கள் தம்மில்லத்திலேயே ராம பஜனை நிகழ்த்தி ராம தீபம் ஏற்றி வழிபட்டனர். ராமர் ஆட்சியில் ஜகத் முழுவது ராமமயமாயிற்று என்று வால்மீகியின் கூற்றை மீண்டும் அயோத்தி ராமமயமாயிற்று என்றால் மிகையாகாது. இதைச் சீரும் சிறப்பாகச் செய்த ப்ரதமர் மோடி அவர்களுக்கும், உத்தர ப்ரதேச முதல்வர் ஆதித்ய நாத் அவர்களுக்கும் நமது பாராட்டுகள். இது மட்டுமல்லாமல் அயோத்தியில் வால்மீகியின் பெயர் தாங்கிய விமான நிலையம், வசதிகள் நிறைந்த புகை வண்டி நிலையம், பஸ் நிலையம், பெரும் ம்யூசியம், சர்வ கலாசாலை இப்படிப் பலப்பல விஷயங்களால் நிரப்பப்படுகிறது. இதில் பங்கேற்ற அனைவருக்கும் ஸ்ரீ ராமனின் அருள் பரிபூரணமாகக் கிடைக்கும் என்று கூறி இவ்விதழை ஸ்ரீ சரணர்கள் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.*


*ஜெய் ஸ்ரீ ராம்*

*ஜய ஜய சங்கர ! ஹர ஹர சங்கர!*

# தெய்வத்தின் குரல்

**ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்**

## மத விஷயத்தில் அரசின் பங்குக்குள்ள வரம்பு



பங்கு உண்டு எனும்போதே ஜாக்கிரதையுடன் புரிந்து கொள்ள வேண்டிய ஒரு விஷயமும் கூற வேண்டும். என்னவெனில், நாட்டைச் சேர்ந்த பிரஜைகளின் உள்ளவுயர்வுக்கு உபாயமான மத அபிமானத்தை வளர்த்துக் கொடுப்பதில் அரசாங்கத்திற்கு ஒரு பங்கு மட்டுந்தான் உண்டு என்பதேயாகும். அதாவது மதத்துறையில் அரசாங்கமே முற்றிலும் பொறுப்பேற்பது ஒருபோதும் ஏற்கத் தக்கதல்ல. மத வளர்ச்சியில் தன் பங்கை ஓர் அரசாங்கம் மறக்கலாகாது என்பது எவ்வளவு முக்கியமோ, அதனினும் முக்கியம் அப்பங்கின் வரம்பைக் கடந்து அது செயலாற்றலாகாது என்பதாகும்.

இதன்படி மத விஷயங்களில் கோட்பாடுகளில், பழக்கவழங்களில் ஓர் அரசாங்கமே நேரடியாகப் பிரவேசித்து எதுவும் செய்தல் அறவே கூடாது.

## மதக் கொள்கைக்கு முரணான சட்டங்கள் கூடாது

அதாவது எல்லா மதங்களுக்கும் ஒரே போல் ஆதரவளிப்பதான சரியான செக்யூலரிஸமோ, எம்மதத்திலும் சம்பந்தம் கொள்ளாத தவறான செக்யூலரிஸமோ, அதனை அரசாங்கம் ஏற்கின்ற போதிலும் அரசியலாரின் சமூகக் கொள்கைகளுக்குப் பொருந்தும் வகையில் மதங்களில் வகுத்துள்ள விதிகளுக்கு முரணாகச் சட்டமியற்றும் அதிகாரத்தை அரசாங்கம் கைக்கொள்ளலாகாது. எம் மதத்திலும் சம்பந்தப்படுவதில்லை என்ற தவறான செக்யூலரிஸத்தை மேற்கொண்ட பின்பும் எதிர்மறை சம்பந்தமாக மத விதிகளில் இவ்வாறு துர்பிரவேசம் மட்டும் செய்யலாம் என அரசாங்கம் கருதுமேயாகில் அதனை நாம் ஏற்பதற்கில்லை.

# மதக் கொள்கையை மீறினால் அதிலும் சமநீதி காட்ட வேண்டும்.

எனினும் தவிர்க்க முடியாமல் அவ்வாறான ஒரு நிலையைத் தாங்கிக் கொள்ள நேரிடின், அப்போது ஒரு விஷயத்தை வலியுறுத்த விரும்புகிறோம். அதாவது மத விதிக்கு முரணாகவும் தமது சமூகக் கொள்கைக்கு ஏற்பச் சட்டமியற்றலாமென ஓர் அரசாங்கம் கருதுகையில் இக்கருத்தை நாட்டின் சகலப் பிரஜைகள் குறித்தும் ஒரே போல் அமல் செய்து, அதாவது நாட்டில் வழங்கும் எல்லா மதங்களின் விதிகளையும் கருதாது சமமாக அமல் செய்து, பிரஜைகள் அனைவருக்கும் சம நீதி வழங்குதல் என்ற ஆதாரக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும்.

சில மதஸ்தரின் மத விதிகளில் மட்டும் புகுந்து மாற்றுவது, மற்றவர்களைத் தொடாமல் விடுவது எனப் பாரபட்சம் செய்தால் ஜனநாயகக் குடியரசு என்பதன் அஸ்திவாரக் கொள்கையிலேயே ஒன்றான சகலருக்கும் சம நீதி என்பதை அரசாங்கமே முறித்த மாபெரும் தவறாகும்.

## அரசின் எல்லைக்கு அப்பாற்பட்ட துறை

எத்துறையிலும் சட்டம் வகுப்பதற்கு முன் அத்துறையில் ஆழ்ந்த அறிவும் தேர்ந்த அநுபவமும் பெற்ற நடுநிலையாளரான தக்கோரிடம் அது குறித்து ஆலோசனை கோரிப் பெற வேண்டியது ஓர் அரசாங்கத்தின் கடமையாகும். இதன் பொருட்டு ஒவ்வொரு துறைக்கும் ஓர் அறிஞர் குழு அமைக்கப்பட வேண்டும்.

பொருளாதார வளர்ச்சி, பாதுகாப்பு என்ற இரண்டிலேயே ஒருவாறு அடங்கி விடும் ஒன்றாக அரசாங்கப் பணியானது உலகெங்கிலும் வழக்கமாகிவிட்ட இன்றைய நிலையில், மதமென்ற துறையைப் பார்க்குமிடத்தோ அது அப்பணியின் எல்லைக்கு அப்பாற்பட்ட ஆன்மா என்பதன் சம்பந்தமுள்ளதாக இருக்கிறது. ஆட்சி புரிவோர்க்கு இத்துறையில் அறிவோ, மதவுணர்ச்சி என்பதே கூடவோ, இருக்க வேண்டிய தேவையில்லை என்றும் ஆகியுள்ளது. எனவே இத்துறை, அரசாங்கம் உள்ளே பிரவேசித்துச் சட்டம் வகுக்க இடம் தராத ஒன்றாக உள்ளதென ஆகிறது.

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## ஆண்டவன் ஏற்றும் ஆத்ம தீபம்

நம்முடைய தர்மம் வைதீக தர்மம், வேத தர்மம் என்று சொல்வார்கள். ஒவ்வொரு மதத்தின் பெயரும் அந்தந்த அமைப்பாளர்களின் பெயரோடு வரும்.

இயேசு கிறிஸ்து அமைத்தது என்பதால்- கிறிஸ்தவ மதம் என்பார்கள். முகமது நபி அமைத்ததால் அந்த மதத்தை முகமதியர் மதம்- இஸ்லாம் மதம் என்பார்கள்.

ஆனால் நம்முடைய மதமோ, தனி மனிதரால் ஆரம்பிக்கப்படாமல், உலகம் தோன்றிய காலம் முதல் அனாதிகாலம் தொட்டு வந்து கொண்டு இருக்கும் மதம் ஆகும்.

'ஆதி' என்றால் ஆரம்பம். 'அனாதி' என்றால் ஆரம்பம் இல்லாதது என்று பொருள். ஆகவே நம்முடைய மதத்திற்கு, 'தர்ம மதம்', 'தார்மீக மதம்' என்றுதான் பெயர்.

அதை வைத்துத் தான் மகாபாரதத்திலே கூட நாம் தர்மம் செய்தால் அந்த தர்மம் நம்மைக் காப்பாற்றும் என்று சொன்னார்கள்.

- 'தர்மத்திற்கு எப்போது பங்கம் வருமோ, பகவான் கீதையிலே அப்போது நான் அவதரிப்பேன்' என்று சொன்னார்.



ஆக தர்மம் என்றால் தார்மீகமான மதம். அதைச் சார்ந்தவர்க ளுக்கு எப்போது குறை வருகிறதோ, அப்போது நான் அவதரிப்பேன் என்று சொன்னார்.

அதை வைத்துத் தான்- மகாபாரதத்திலே கூட நாம் தர்மம் செய்தால் அந்தத் தர்மம் நம்மைக் காப்பாற்றும் என்றும் சொன்னார்கள்.

வெள்ளி, தங்கம் போன்ற பொருள்கள் பீரோவில், லாக்கரில் வைப்பது. ஆனால் தர்ம லட்சணம் என்பது வாழ்க்கையில் கடைப்பிடிப்பது.

தர்ம லட்சணம் என்பது தர்மத்தை வாழ்க்கையில் கடைப்பிடித்தால், தர்ம தேவதை பிரசன்னமாகி நமக்கு எல்லாவிதமான அருளையும் வழங்குவாள் என்பதாகும்.

இன்றைய காலகட்டத்திலே அதற்கு, 'இந்து மதம்' என்ற பெயர் வந்திருக்கிறது. நம்முடைய தர்மத்திற்கு அடிப்படையானது வேதங்கள். அதனால் இதை 'வைதீக மதம்' என்று சொன்னார்கள்.

பழங்காலம் தொட்டு வந்து கொண்டிருப்பதனாலே அதனை 'சனாதன தர்மம்' என்று சொன்னார்கள்

பைபிளைப் படிப்பவர்கள் எல்லோரும் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் கட்டாயம் பைபிள் படித்தாக வேண்டும். ஆனால், பைபிள் படிக்கிறவர்கள் எல்லாம் கிறிஸ்தவர்கள் ஆக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

முஸ்லிம்கள் குர்ஆனைப் படித்தாக வேண்டும். ஆனால் குர்ஆன் படித்தவர்கள் எல்லோரும் முஸ்லிம்களாக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

நாம்கூட பைபிள், குர்ஆன் படித்துத் தெரிந்து கொள்ளலாம். அதுபோல நம் இந்து மதத்திலே வேதம் படித்தால்தான் 'இந்து' என்ற கட்டாயம் ஏற்படவில்லை.

ஏனென்றால் வேதம் சொன்னபடி வாழ்க்கையை நடத்துவதுதான் நம்முடைய மதம் என்றாகிவிட்டது. அதனால் சும்மா படிப்பதற்கு முக்கியத்துவம் தரப்படவில்லை.

வேதம் படிக்காத மதம் ஒரு மதமா? என்ற ஒரு கேள்வி வந்துவிட்டது. ஆனால் வேதம் சொல்லும்படி வாழ்கின்ற மதம் இந்த இந்துமதம் என்று காலம் காலமாக விளக்கிக் கொண்டு வருகின்றோம். வேதத்தை நம்புகிற மதம் இது.

வேதம் படிக்காத மதம் நம்மிடையே வருவது எப்படி... அனுபவித்து பார்த்து பார்த்து வருகிறது.

அப்பா செய்வதைப் பார்த்து பையன் செய்வான். பையன் செய்வதைப் பார்த்து அவனுடைய பையன் செய்வான். இப்படியாக அடுத்தடுத்த தலைமுறைகள் பரம்பரை பரம்பரையாகக் கடைப் பிடிக்கும் மதம் நம்முடைய மதம்.

இப்படிக் கடைப்பிடித்து ஒழுகுவதால்தான் படிப்பதற்கு அவசியம் இல்லாமல் போய்விட்டது. வாழ்க்கையின் நடைமுறையிலேயே நம் இந்து மதத்தை கொண்டு வந்துவிட்டார்கள். அதனால் தான் 'சனாதன தர்மம் உள்ள மதம்' என்று பெயரும் வைத்தார்கள்.

மிகவும் பழைமையான மதம் என்பதால் பலருக்கு மனதில் அதிலே ஒரு ஐயப்பாடு வந்து விட்டது. மிகவும் பழைமையாக இருப்பதால் அதிலே என்ன என்ன இருக்குமோ என்று அஞ்சுகிறார்கள்...

அப்படி ஒரு அலர்ஜியே வந்துவிட்டது.

பழைமை என்றால் என்ன? மாறாத விஷயங்களுக்கு ஏது பழமை புதுமை?

'உண்மை' இருக்கிறது என்றால், அந்த உண்மைக்கு பழையதும் புதியதும் இல்லை. என்றைக்கும் உண்மை உண்மைதான்.

'திருடக் கூடாது, பொய் சொல்லக்கூடாது, எல்லோரிடமும் அன்பு காட்ட வேண்டும்' என்று கூறும் விஷயங்கள் யாவுமே பழைமையானாலும் நல்ல விஷயங்கள் தானே...

இந்த விஷயங்களைப் பழைமை என்று கூறி ஒதுக்கமுடியுமா? சுதந்திரப் போராட்டக் காலத்திலே தான், நமக்கு 'இந்து' என்ற பெயர் வந்தது. எல்லோரும் ஒன்றாக ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்பதற்காக!

அதற்குப் பலவிதமான அர்த்தங்கள் சொன்னார்கள். பிறர் அடித்தாலும் பொறுமையோடு வாங்கிக் கொள்ள வேண்டும். அவன்தான் இந்து என்று சொன்னார்கள்.

நம் பெரியவர்கள் உபன்யாசத்திலே அதைத்தான் சொன்னார்கள் : சிந்து சமவெளி நாகரிகத்திலே தான் நம்முடைய பழக்க வழக்கங்கள் ஆரம்பித்திருந்தன. அதனால் 'சிந்துதான் இந்து'வாக வந்தது என்று.

ஒரே மதமாக இருந்ததால் அதே பெயர் போதும் என்றார்கள். நான்கைந்து மதங்கள் இல்லை. ஒரு ஊரில் பாலு என்பவன் ஒருவன் மட்டும் இருந்தால் அவர்தான் பாலு. நான்கைந்து பாலு இருந்தால் 'அவர் அந்த பாலு', 'இவர் இந்த பாலு' என்று வேறுபடுத்தி அடையாளம் காட்டுவார்கள்.

ஆகவே, நம்முடைய மதம் ஒரே மதமாக இருந்ததால் அதற்கு 'வைதீக மதம்' என்று பெயரிட்டார்கள். 'தர்மம்' என்றும் பெயரிட்டார்கள்.

வைதீகன், சனாதனன் என்றும் அழைத்தார்கள். இவை பழங்காலந் தொட்டு வருவது.

புனர் ஜென்மத்தை ஒத்துக்கொள்ளக் கூடியவன். கர்மாவை ஒப்புக்கொள்ளக் கூடியவன். அக்னி சம்ஸ்காரத்தை ஏற்றுக்கொள்ளக் கூடியவன் என்று பலவிதமான விளக்கங்கள் எல்லாம் நமக்கு இருக்கின்றன.

அப்படிப்பட்ட பழைமையான மதம் நம்முடைய மதம். ஆனால் நம் இந்து மதத்தைப் பிடிக்காதவர்களும் அந்தக் காலம் தொட்டே இருந்து வந்திருக்கிறார்கள்.

ஒரு மதத்தினருக்கு இன்னொரு மதத்தைப் பிடிக்கவில்லை என்றால் அந்த மதத்தைப் பற்றித் தவறாகத்தான் சொல்லுவார்கள். அது இயற்கை.

ஒருவனுக்குப் பிடிக்கும்வரை அவனோடு அன்பாகப் பேசுவான். பிடிக்காதபோது துவேஷமாகப் பேசுவான். மனிதனுக்குள்ளேயே இது சகஜம். பிறகு மதத்திற்குள்ளே சொல்லவா வேண்டும்?

அந்த வகையிலே, நம்முடைய மதத்தைப் பற்றியும் தப்பாகப் பேசினார்கள். நம்முடைய மதமானது கடைப்பிடிக்கக் கூடிய ஒரு அனுஷ்டானமான மதம். ஒருவர் கடைப்பிடிப்பதைப் பார்த்து மற்றவர்கள் பரம்பரை பரம்பரையாக கடைபிடித்து வரும் வாழ்க்கை முறையைக் கொண்டது.

அதனால்தான், தாய் எப்படியோ, அப்படித் தான் பிள்ளைகளும் இருப்பார்கள் என்று நாம் சொல்கிறோம்.

'தாயைப்போல பிள்ளை, நூலைப் போல சேலை' என்பார்கள். தாய் எப்படியோ, அப்படித்தான் பிள்ளையும் இருக்கும்.

நம் மதத்தில் முதலில் தாய், அதன் பிறகு தந்தை, பிறகு தான் ஆச்சார்யரை வைத்து வழிபட்டார்கள்.

அந்த மாதிரி ஆச்சாரத்தைக் கடைப்பிடிப்பது நம் இந்து மதம் மட்டும்தான்.

கொஞ்ச நாட்களுக்கு முன்னால் நாங்கள் காஞ்சிபுரத்திலே 'மனவளர்ச்சி குன்றியவர்'களுக்கான பள்ளி ஒன்றைத் துவக்கினோம். அப்போது நான் அங்கு உபன்யாசம் செய்தேன். அங்கே ஒரு கூட்டத்தில் மனவளர்ச்சி குன்றியதற்கான காரணம் என்ன என்று ஆராய்ச்சி பண்ணியதைப்பற்றி பலரும் பேசினார்கள்.

தாய் தந்தையர்களுடைய பலனே மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் பிறக்கக் காரணம் என்று அந்த விஞ்ஞானிகள் கூறினார்கள். நாம் எல்லாம் அதை அவன் 'தலைவிதி', 'கர்மா' என்று சொல்வோம்.

ஆனால் அதை விஞ்ஞானம் ஏற்றுக் கொள்ளாது. ஆனால் விஞ்ஞானப்பூர்வமாக அது தாய்தந்தையரின் பிரதிபலனே (reaction) என்று கண்டு பிடிக்கப்பட்டதாக ஒருவர் பேசினார்.

நான் உபன்யாசம் பண்ணும்போது இப்படிப் பேசினேன்:

'இவர்கள் இன்றைக்குச் சொல்கிறார்கள். ஆனால் இந்த மனவளர்ச்சிக் குறைவு எப்போதோ வந்துவிட்டது. மகாபாரதத்திலே, பஞ்சபாண்டவர்கள் என்று 'ஐவர்' இருந்தார்கள். அவர்களுடைய தகப்பனார் பாண்டவர். பாண்டவரின் அண்ணன் திருதராஷ்டிரன். அந்தப் பாண்டவரின் தம்பி விதுரன்.

இந்த மூன்றுபேரும் அண்ணன் தம்பிகள். பஞ்ச பாண்டவர்களின் அப்பாவிற்கு வெகுகாலம் குழந்தை இல்லாமல் இருந்தது. அந்த ராஜா பிள்ளைக்காக ஏங்கினார்.

குழந்தை இல்லாமலேயே அவர் செத்துப் போனார். ஆனால் அந்தக் காலத்தில் வம்சாவழி ஆட்சி முறை இருந்ததால், ஒருமுறையை வைத்திருந்தார்கள். அதன்படி ரிஷிகள், ஞானிகள் மூலமாக அனுக்கிரகம் பெற்று, குழந்தை பெற்றுக் கொண்டு அந்த வம்சாவழி மரபைக் காப்பாற்றினர்கள்.

அதன்படி வேதவியாச மகரிஷி அவர்களுக்குப் பெரியவராகவும், குருவாகவும் இருந்ததினாலே அவரிடம் போய்த் தங்கள் குடும்பத்துக்கு வம்ச பாரம்பரியம் வேண்டினார்கள்.

ஆனால் அந்த மகரிஷியைக் கண்டவுடன் அந்தப் பெண்மணி பயந்து வெல வெலத்துப் போய்விட்டாள்.

மகரிஷியின் தாடி, மீசையைப் பார்த்து கண்களை இறுக மூடிக்கொண்டாள். அப்போது பிறந்தவன் தான் திருதராஷ்டிரன்.

அந்த பயஉணர்ச்சியோடு பிறந்ததால்தான் அவன் குருடனாகப் பிறந்தான். ஆனாலும் வியாச மகானுடைய அருள் கிடைக்க பாக்கியம் செய்திருக்க வேண்டுமே என்று எண்ணி பெருமைப்பட்டான்.

'நமக்கு எப்படித் தாய் இருக்கிறாளோ, அப்படித் தான் தாய்தந்தையரின் பழக்க வழக்கங்கள் பிள்ளைகளிடம் காணப்படும்' என்று பேசினேன்.

தர்மபுத்திரர் பிறந்து விட்டார். அடுத்த படியாக காந்தாரி பிரசவிக்கப் போகிறாள். கர்ப்பவதியான காந்தாரி, இன்றோ நாளையோ என்று இருக்கிறாள். ஆனால் அதற்குள் குந்திக்குக் குழந்தை பிறந்து விட்டது....

ஏற்கெனவே திருதராஷ்ட்ரன் அண்ணனாக இருந்தாலும், கண் இல்லாததால் தம்பி பாண்டுவே ராஜ்யத்தைப் பார்க்கும் சூழ்நிலை வந்தது.

அடுத்த தலைமுறையில் அவளுக்கு நல்லபிள்ளை பிறந்துவிட்டால் சட்டப்படி அவர்கள்தான் ராஜ்யத்தை ஆளவேண்டியது வரும். அதனால் தம்பி குழந்தை வந்துவிட்டதால் ராஜ்யம் கிடைக்காமல் போய்விடுமோ என்ற கவலை வந்துவிட்டது.

ஆகவே, தனது வயிற்றை இரண்டு கைகளால் அடித்துக்கொண்டாள். அதனால் கர்ப்பம் கலைந்து 101 குழந்தைகளாகப் பிறந்தது என்று மகாபாரதக் கதை கூறுகிறது.

தாயினுடைய செயலால்தான் ஒரு கரு நூற்றியொரு கருவாகப் பிரிந்தது. இன்றைக்கு சைல்ட் டிரஸ்ட் ஆஸ்பிடலிலே குறைப் பிரசவமாகப் பிறக்கும் குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக ஒரு தொட்டில் வைத்திருக்கிறார்கள்.

அதற்குப் பெயர் (Incubate) ‘இங்க்யூபேடு’ என்று சொல்வார்கள். அதிலே கொஞ்சநாள் போட்டு வைத்தால் குழந்தைக்குக் கொஞ்சம் கொஞ்சமாக உயிர் வரும். அந்தக் குழந்தையைப் பார்த்தால் இத்தனூண்டுதான் இருக்கும்.

அந்த ‘இங்க்யூபேடு’ வழியாகத்தான் குழந்தைக்கு ஆகாரம், தண்ணீர், காற்று எல்லாமே போகிறது. இந்த இங்க்யூபேடு இன்றைக்குத்தான் விஞ்ஞானத்தில் வந்திருக்கிறது.

ஆனால் அந்தக் காலத்திலே 101 குழந்தைகள் பிறந்தவுடன், தேங்காய்களை உடைத்து, இரண்டு இரண்டாகப் பிளந்து, அதிலே நெய் போட்டு, அந்த நெய்யிலே ஒவ்வொரு குழந்தையாக மொத்தம் 101 குழந்தைகளையும் போட்டு வைத்தார்கள். இப்படி அந்தக் காலத்திலேயே இந்த ’இங்க்யூபேடு’ தோன்றி விட்டதாக மகாபாரதம் கூறுகிறது.

தாய், தந்தையருடைய உணர்ச்சிகள் தான் பிள்ளைகளுக்கும் உருவாகும்.

பக்த பிரஹலாதன் பிறந்தான். அவனது அப்பா பயங்கரமான ராட்சஸன், கொடியவன். இது அனைவருக்கும் தெரியும். ஆனால் அவனுடைய தாயாரின் பெயர் யாருக்குமே தெரியாது.

கயாது என்று பெயர்.

அந்தத் கயாது என்றைக்கு கருவுற்றாளோ, அன்றைக்கே தன் புருஷனைப் போலவே பிள்ளையும் பிறந்துவிடக் கூடாது என்பதற்காக எப்போதும் நாராயண மந்திரம் சொல்லிச் சொல்லி, அந்தக் கர்ப்பத்தைக் காப்பாற்றினாள்.

அதனால் அந்தக் குழந்தை பிறக்கும்போதே நாராயண அம்சத்தோடு பிறந்தது. வெளியே வந்த உடனேயே நாராயண மந்திரத்தை சொல்லத் தொடங்கியது. குழந்தை வளர ஆரம்பித்த பிறகு அப்பன் எவ்வளவோ மிரட்டிப் பார்த்தான்.

என்ன சொல்லியும் அந்தக் குழந்தை கேட்டதாக இல்லை.

‘நாராயணா... நாராயணா... நாராயணா... ’ என்று தான் சொல்லிக் கொண்டிருந்தது.

இது எப்படி வந்தது?

‘தாயைப்போலப் பிள்ளை... நூலைப் போலச் சேலை...‘ அப்படித்தான் வந்தது.

இன்றைக்கு விஞ்ஞானத்திலே ஆராய்ச்சி பண்ணி, பெற்றோரிடமிருந்தே பிள்ளைகளுக்குப் பாதிப்புகள் வருகிறது என்பதை எப்படி கண்டுபிடித்தார்களோ, இது அந்தக் காலத்திலேயே இருந்து வந்துவிட்டது.


(தொடரும்)

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## வஜ்ர மஹோத்ஸவம், திருவிடைமருதூர்

ஸ்ரீ ஸங்கர மடம், திருவிடைமருதூர் சனிக்கிழமை, 02-12-2023



எதாவது ஒரு விஷயத்தை, ஊர்ஜிதமாக சொல்லணும், உரக்க சொல்லணும், அழுத்தம் திருத்தமாக சொல்லணும், சந்தேகம் இல்லாத விதத்தில் சொல்லணும், மறுபடியும் ப்ரச்னை இல்லாத விதத்தில் சொல்லணும், *சமூல அக்ஞான நாசனம்* பண்ணணும், என்கிற பொழுது, இந்த மூன்று தடவை சொல்கிறது என்பது ஒரு பழக்கம் இருந்து இருக்கிறது. காஞ்சீபுரத்தில் வ்யாஸ சாந்தாலீஸ்வரர் கோவிலில் பெருமாளைவிட யாரும் உயர்ந்தவர் இல்லை என்று சொன்னதாக ஒரு சம்பவம் வருகிறது. அதில்

***கோவிந்தாததிகம் நதைவதமிதி ப்ரோச்சார்ய ஹஸ்தாவுபா வுத்த்ருத்யாத ஶிவஸ்ய ஸம்நிதிகதோ வ்யாஸோ முனீனாம் வர. யஸ்ய ஸ்தம்பிதபாணிரானதிக்ரு தா நந்தீஶ்வரேணாபவ த்தஸ்மின்மே ஹ்ருதயம் ஸுகேன் ரமதாம் ஸாம்பே பரப்ரஹ்மணி.***

அங்கே நந்திகேஸ்வரர் பார்த்தார். சரி இல்லை என்று நினைத்தார். தூக்கிய கை அப்படியே இருக்கும்படி பண்ணி விட்டார். அப்புறம் சிவ பூஜை செய்த பிறகு வ்யாசருக்கு கை யதா ஸ்திதி வந்தது என்று காஞ்சீபுரத்திலுள்ள வ்யாஸ சாந்தாலீஸ்வரர் ஸ்தல புராணதில் கேள்விப்படுகிறோம். அங்கேயே பெரியவா கொஞ்ச நாட்களுக்கு இருந்து அனுக்ரஹம் பண்ணிண்டு இருந்தார்.

**ஹர ஹர நம பார்வதி பதயே ஹர ஹர மஹாதேவா** வடக்கே, காசியில் இரண்டு கையும் உயரத் தூக்கி சொல்கிறார் போல், சப்தம் போடுவதற்காக கையை தூக்குவது வேறு விதம். ஒரு கையை தூக்குவது வேறு, இரண்டு கைகளையும் தூக்குவது வேறு, தூக்கி எறிகிறது என்பது வேறு.

இங்கே மத்யார்ஜுனத்தில், எங்கே நீங்கள் எல்லோரும் சபை நடத்துகிறீர்களோ அங்கு தைப்பூசம் விசேஷம். புஷ்யோத்சவம் நடக்கிற ஊர் இந்த மத்யார்ஜுன க்ஷேத்திரம். இதைப் பற்றி பெரியவா நிறைய சொல்லி இருக்கிறார்கள்.

தாம்ரபரணிக் கரையில் புட்டார்ஜுனேஸ்வரர் க்ஷேத்திரம், திருப்புடைமருதூர் உள்ளது. புது பெரியவா ஜஸ்டிஸ் ரத்னவேல் பாண்டியன் மூலமாக இந்த கோயில் கும்பாபிஷேகம் நடத்திக் கொடுத்தார். நாமும் கூட இருந்தோம்.

*ஸ்ரீ சைலே மல்லிகார்ஜுனம், ஸ்ரீ சைல சிகரம் த்ருஷ்ட்வா புனர் ஜன்ம நாஸ்தி* அப்படிப்பட்ட ஊர் அது. ஆசார்யாள் தபஸ் செய்த ஊர் அது. ஆசார்யாள் தபஸ் செய்த இடத்திலேயே பெரியவா இருக்க ஆரம்பிச்சா. அப்புறம் மேனேஜர், கூட இருந்தவர்கள், புதுப் பெரியவா எல்லோரும் ஒன்று கூடி, பெரியவா யாத்திரை எல்லாம் பண்ணனும். இங்கேயே இருந்தால் சரிப்பட்டு வராது. அப்படின்னு சொல்லி அதற்கு அப்புறம் அங்கேயிருந்து வந்தார். ஆசார்யாள் தபஸ் பண்ண இடத்தை கண்டு பிடித்துக் கொடுத்தார். இப்பொழுது ஜனங்கள் தரிசனம் செய்கிறார்கள். அங்கேயே ஒரு சங்கர மடம் ஸ்தாபனம் பண்ணி ஆசார்யாளை அங்கே ப்ரதிஷ்டை செய்தார். எங்கே தபஸ் செய்தாரோ அங்கே ஆந்த்ர ப்ரபா பேப்பரில் போட்ட ஒரு ஃபோட்டோ கூட கிடைத்தது. அந்த ஃபோட்டோவில் போட்ட விக்ரஹம் போல் ஸ்ரீ சைலத்தில் வைப்பதற்கு பிரயத்தனம் நடந்து கொண்டிருக்கிறது.

இந்த இரண்டு அர்ஜுன க்ஷேத்திரத்திற்கு மத்தியில் இருக்கக் கூடியது மத்யார்ஜுனம், இடைமருதூர் அப்படின்னு ஓரிருக்கையில், ஜஸ்டிஸ் ரத்னவேல் பாண்டியனுக்கு பெரியவா இந்தக் கதை எல்லாம் சொல்கிறார். இரண்டு அர்ஜுன க்ஷேத்திரத்திற்கும் நடுவில் இருக்க கூடியது, திரு இடை மருதூர். அந்த மத்தியார்ஜுன க்ஷேத்ரம் ரொம்ப விசேஷமானது. ஸ்தல புராணத்தின்படி, அதற்கான முக்கியத்துவம் எல்லாம் பெரியவா சொல்லி இருக்கிறார். இது தஞ்சாவூர் ஜில்லாவில் இருக்கக்கூடிய முக்கியமான க்ஷேத்ரம். அதைச் சுற்றி நிறைய பரிவார க்ஷேத்ரங்கள் உள்ளன. திருவலஞ்சுழி, சுவாமிமலை, சேங்கனூர், இத்யாதி. பிரதான கேந்திரம் மகாலிங்க சுவாமி கோவில். இந்த மத்தியார்ஜுன க்ஷேத்ரத்தில் இருக்கும் சங்கர மடம் மிகவும் பிராசீனமானது. மராட்டா நிர்வாகிகள், ஆட்சியாளர்கள் எல்லாம் மடத்திற்கு பக்கத்தில் உள்ள அவர்களுடைய இடத்தில் தங்கியிருந்தார்கள். இங்க நிறைய பெரியவர்கள் தங்கியுள்ளனர். சுவாமி பெயரை வைத்துக் கொண்டவர்கள் கூட பெரியவர்கள் ஆகியுள்ளார்கள். மத்தியார்ஜுனம் என்ற ஊர், இந்த மடத்தை பொறுத்தவரை ஆச்சார்யாள் காலத்தில் இருந்து முக்கியமான க்ஷேத்ரம். ஆச்சார்யாளின் வரலாற்றை

சொல்கிற ஒரு புத்தகத்தில்,

**ஸம்ப்ராப்த ஸந்தோஷ விநீத ஶிஷ்யை:**
**ஸாகம் ஜகத்யாம் விஜயம் விதித்ஸு:**
**அத்வைத ஸித்தாந்த ஸரோஜ ஸூர்யோ**
**மத்யார்ஜுனேஶாவஸ்தம் யயௌ ஸ: ।**
**தம் பூஜயித்வா அனுசரை: ஸபாயாம்**
**பப்ரச்ச தத்வம் கிமிஹேதி யோகீ**
**த்ருச்யாக்ருதி ப்ரோச்ச புஜோSத**
**ஸத்யம் அத்வைதம் ஏவேத்யவதத் த்ரிரீஶ: ।।**

அத்வைத சித்தாந்தம் என்கிற தாமரை இவரால் மலர்கிறது. இவர்தான் அத்வைதத்தை பிரகாசப்படுத்தினார். அத்வைதம் ஏற்கனவே வேதத்தினுள் இருக்கிறது. இதை ஆச்சார்யாள் பிரகாசப்படுத்தினார். புதியதாக நான் ஏதோ கட்சி ஆரம்பிக்கிறேன், அப்படினு ஆரம்பிக்கவில்லை. அவர் நானும் ஒரு புதிய புதியதாக ஒரு மதத்தை உருவாக்குகிறேன் என்று பண்ணவில்லை. வேதம் தான் பாரதத்தின் மதம். வேதம்தான், உலகத்தினுடைய மதம். உபநிஷத் தான் உலகின் தத்துவம். மக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய தத்துவம். உலகம் என்பது தத்துவம் இல்லை, என்று சொன்ன தத்துவம் அது. அந்த அத்வைதத்தை அடைவதற்கான வழிகளை எல்லாம் சொல்லி, அடைப்பு, உடைப்பு எல்லாவற்றையும் களைந்தார். அடைப்பு இருந்தாலும் கஷ்டம், உடைப்பு இருந்தாலும் கஷ்டம். உடைப்பு இருக்க கூடாது, என்பதற்காக ஷண்மதத்தை ஸ்தாபித்தார். அடைப்பு, (அக்ஞானம்) இருந்தால் ஞானம் பிரகாசிக்காது. அதற்காக பாஷ்யங்கள் எழுதினார். பிச்சுண்டு போனால் கஷ்டம். சைவம் தனி, வைஷ்ணவம் தனி, ஷாக்தம் தனி என்று சொன்னால், அவர்களுக்கும் லாபமில்லை. சமுதாயத்திற்கும் லாபம் இல்லை. அதனால் ஆஸ்திக்யம், வைதிகம் என்பதை அவர் ஷண்மத ஸ்தாபனாச்சார்யாய நமஹ, என்று ஆதித்யம், அம்பிகாம், விஷ்ணு, கணநாதம், மகேஷ்வரம் என்று பஞ்சாயத்தன பூஜையை உருவாக்கி, அந்த பஞ்சாயத்தனத்தை கொடுத்தார். பஞ்சாயதனம் என்பது தஞ்சாவூர் ஜில்லாவில், ஒவ்வொரு அகத்திலும் இருக்கும். அதற்கு கிரகஸ்தர்கள் தாமே பூஜை செய்வார், அல்லது யாராவது வைதீகர்களை வைத்து பூஜை பண்ண சொல்லி, அதன் பிறகுதான் சாப்பிடுவது என்று வழக்கம். இப்பொழுது, பலகாரத்தில் இருந்துதான் நாம் வேலைகளை ஆரம்பிக்கிறோம். மொத்தத்தில், சூழ்நிலை சந்தர்ப்பம். அது வேறு. சிவ பூஜையை ஆச்சார்யாள் பிரசித்திப்

படுத்தி ரூப, அரூப. ரூபம் இருக்கா? இருக்குனு சொல்லலாம். ரூபம் இல்லையா? இல்லை என்றும் சொல்லலாம். அந்த மாதிரி நர்மதா பாணம், சாளக்ராமம், சோணபத்ரம், இப்படி இந்த பஞ்சாயதன பூஜையை பிரபலப்படுத்தி, அதனால் அத்வைத சித்தாந்தத்தை ப்ரபலப்படுத்தி, அத்வைத தரிசனத்தை ப்ரசித்திபடுத்தி, அதனால் அத்வைத சித்தாந்த சரோஜ சூரியஹ, அந்தத் தாமரையனது ஆச்சார்யள் மூலமாக மலர்கிறது. **மத்யார்ஜுனேஸ்ராவஸதம்** அவருடைய சிஷ்யர்ளுடன் சேர்ந்து பூஜை செய்தார். **பப்ரச்ச தத்வம் கிமிஹேதி யோகீ** என்ன தத்துவம் அப்படிங்கிறத்தை மகாலிங்க சுவாமி சன்னதியில் கேட்டதாகக் சொல்லுவார்கள்.

**த்ருச்யாக்ருதி ப்ரோச்ச புஜோsத்**
**ஸத்யம் அத்வைதம் ஏவேத்யவதத் த்ரிரீஸ:**

மூன்று முறை சத்யம் அத்வைதம், சத்யம் அத்வைதம், சத்யம் அத்வைதம் என்று மகாலிங்க சுவாமியுடைய வசனத்தை எல்லோரும் கேட்டு அதை பெரியவா வந்து ஸாகாரம், நிராகாரமாக இருந்தாலும், அத்வைத தத்துவம் அது ஒரு ஸாகாரமாக இருந்தாலும், ஸகாரம், அதாவது நெகடிவாக இல்லாமல் இருப்பதற்கு ஸகாரம், பாசிட்டிவான அப்ரோச் இருக்க வேண்டும். மற்றவர்களை நிந்தனை செய்வது. மற்றவர்களுக்கு கஷ்டம் கொடுப்பது, மற்றவர்களை நிராகரணம் செய்வது, என்பது வேறு. நாம் நல்லவர்கள், நம்முடைய தத்துவங்கள் நல்லது. நமது நம்பிக்கைகளை நாம் தான் பலப்படுத்த வேண்டும். நமது நம்பிக்கைகள் என்னென்ன உள்ளனவோ, அந்த நம்பிக்கைகளில், வால்மீகி ராமாயணத்தில் உள்ளது போல், '**சர்வ ஜனே பஜரே பிரீயதாம் மனஹ**' என்று நம்முடைய ஜனங்களிடம் நாம் பிரியத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். நம்முடைய ஜனங்கள் யார்? க்ருஹ்ய சூத்திரத்தின்படி யார் நம்முடைய ஜனங்களோ அவர்களிடம் நம்முடைய நம்பிக்கைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட இந்த அத்வைத தரிசனத்தை, நம் தமிழ்நாட்டில் சைவ பக்தி, என்கிறது. அத்வைத்த பிரச்சாரம் என்பது பிராசீன காலம் தொட்டு இருந்து வருகிறது. ஸ்ரீரங்கம் பக்கத்தில் ஒரு ஊரில், தட்சணாமூர்த்தி சன்னதியில் பகவத்பாதீயம் என்று பகவத் பாதாளுடைய பாஷ்யத்தை பிரச்சாரம் செய்வதற்காக ஒரு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆக, அந்தக் காலத்திலிருந்தே பகவத் பாத பாஷ்யம் என்கிறத்தைப் பற்றி தமிழ்நாட்டில் கல்வெட்டுகள் மூலமாக அங்கே பிரச்சாரம் நடந்த விஷயம் தெரியவருகிறது. மற்றபடி. தமிழிலும் அத்வைத பாவம் பல சாகித்தியத்தில் வெளிப்பட்டிருக்கிறது. அது எல்லாவற்றையும் பெரியவா அத்வைத சபாவினுடைய ஸ்வர்ண மஹோத்ஸவம்

# ஸ்ரீ ஸதாசிவ ப்ரம்மேந்த்ரரின் கீர்த்தனைகள்

ராகம் காபி தாளம் ஆதி

**स्मर वारम् वारम्  मानस स्मर नन्दकुमारम्**

**घोषकुटीरपयोध्रुतचोरम् गोकुलव्रुन्दावन सन्चारम् (स्मर)**
**वेणुरवाम्रुतपानकटोरम् विस्वस्थितिलयहेतुविहारम्  (स्मर)**
**परमहम्सह्रुद्पन्जर कीरम् पटुतरधेनुक्कशम्हारम्  (स्मर)**
**भज रे  गोपालम्  मानस भज रे  गोपालम्**

**ஸ்மர வாரம் வாரம்  மானஸ ஸ்மார  நந்தகுமாரம்**
**கோஷகுடீர பயோத்ருத சோரம்  கோகுலவ்ருந்தாவன் ஸன்சாரம்  (ஸ்மர)**
**வேணுரவாம்ர்தபான கடோரம்  விஸ்வஸ்திதிலய ஹேதுவிஹாரம் (ஸ்மர)**
**பரமஹம்ஸஹ்ருத்பஞ்சரகீரம் படுதர தேனுகபகஸம்ஹாரம்  (ஸ்மர)**

*பொருள் :  மனமே அடிக்கடி நந்தகோபனுக்குப் பிள்ளையான க்ருஷ்ணனை ஸ்மரணம் செய். குடிசைகளில் பாலையும், நெய்யையும் களவாடினவனும், கோகுலம் ப்ருந்தாவனம் இவ்விடங்களில் திரிந்தவனுமான க்ருஷ்ணனை ஸ்மர.*

*புல்லாங்குழல் ஓசையாகிய அமுதபானத்தால் நிரம்பியவனும், உலகனைத்தையும் ஆக்கல் நிலைபெறுத்தல், அழித்தல் இவற்றிற்குக் காரணமான லீலைகளை உடையவனுமான க்ருஷ்ணனை ஸ்மரி.*

*பரமஹம்ஸர்களின் இதயமாகிற கூட்டில் உள்ள கிளி போன்றவனும், பலிஷ்டர்களான தேனுகாஸுரன், பகாசுரன் இவர்களை அழித்தவனுமான க்ருஷ்ணனை ஸ்மரி.*

# தாயுமான சுவாமிகளும், அத்வைத நிலையும்

(கஜாரணியத் திராவிட கவிமணி வே. முத்துஸ்வாமி ஐயர்)

**உற்றுணர்ந் தெலாம் நீயல தில்லையென் றுனையே**
**பற்றுகின்றனர் எந்தைநின் னடியார் யான்பாவி**
**முற்று மாயமாஞ் சகத்தையே மெய்யென முதல்தான்**
**அற்றி ருந்திடத் தொழில் செய்வான் தனைநிகரானேன்.**

**எனக்கெனச் செயல் 28.**

மெய்கண்ட தேவரை யுள்ளிட்டார் உலகமதை முயற்கொம் பென்றும் வான்மலரென்றும் ஓரிடத்திலும் கூறவில்லை; ஸ்ரீமத் சங்கரபகவத்பாத ஸ்வாமிகளை யுள்ளிட்டோர் உலகமதை முயற் கொம்பென்றும் வான்மலரென்றும் கூறுகின்றனர். தாயுமானார் ஸ்ரீமத் பகவத் பாதஸ்வாமிகளைப் பின்பற்றியே உலகத்தை முயற்கொம்பென்றும் வான்மலரென்றும் கூறியிருக்கிறார்.

## சீவனும் பரம்பொருளும் வேறல்ல

'சீவனும் பரம்பொருளும் வேறல்ல' என்பது அத்வைதக் கொள்கை. அதை விளக்கும் சுவாமிகள் வாக்குகள் வருமாறு:

**யானெனல் காணேன் பூரண நிறைவில் யாதினும் இருந்தபே ரொளிநீ**
**தானென நிற்குஞ் சமந்துற என்னைத் தன்னவ னாக்கவுந் தகுங்காண்**
**வானென வயங்கி யொன்றிரண் டென்னா மார்க்கமா நெறிதந்து மாறாத்**
**தேனென ருசித்துள் அன்பரை கலந்த செல்லமே சிற்பர சிவமே.**

- சிவன் செயல் 10.

**தானான தன்மயமே யல்லால் ஒன்றைத்**
**தலையெடுக்க வொட்டாது தலைப்பட் டாங்கே**
**போனாலும் கற்பூர தீபம் போலப்**
**போயொளிப்ப தல்லாது புலம் வேறின்றாம்**
**ஞானகாரத்தினொடு ஞேய மற்ற**
**ஞாதுருவும் நழுவாமல் நழுவி நிற்கும்**
**ஆனாலும் இதன்பெருமை எவர்க்கார் சொல்வார்**
**அதுவானால் அதுவாவர் அதுவே சொல்லும்.-**

ஆகார புவனம், சிதம்பர ரகசியம் 22.

ஒன்றிரண்டாய் விவரிக்கும் விவகாரம் கடந்தேழாம்
யோகபூமி நின்று தெளிந்தவர்.

மண்டலத்தின் 2.

தன்னை யறிந்தவர் தம்மைத் தானாகச் செய்தருளுஞ்
சமத்தை

மண்டலத்தின் 5.

நீயென நானென வேறில்லை. பாயப் புலி 58

சித்தந் தெளிந்து சிவமானோ ரெல்லோர்க்கும்.

-பராபரக் கண்ணி 148.

அத்து விதமான அயிக்ய அனுபவமே. - பராபரக் கண்ணி 293.

தன்மயமாய் நின்றநிலை தானே தானாகி நின்றால்
நின்மயமாய் எல்லாம் நிகழும் பராபரமே.

பராபரக் கண்ணி 318.

நீயேநான் என்று நினைப்பும் மறப்பு மறத்
தாயே அனைய அருள் தந்தாய் பராபரமே.

-பராபரக் கண்ணி 377.

தானவனாந் தன்மை எய்தி. -எந்நாட் கண்ணி, நிற்குநிலை 14.

சச்சிதா னந்தசிவம் தானென்ப தென்னாளோ.

- எந்நாட் கண்ணி, நிலைபிரிந்தோர் கூடுதற் குபாயம் 8

எங்குஞ் சிவமே இரண்டற்று நிற்கில் நெஞ்சே
தங்குஞ் சுகநீ சலியாதே - அங்கிங்கென்
றெண்ணாதே பாழி லிறந்து பிறந்துழலப்
பண்ணாதே யானும் பரம்.

உடல் பொய்யுறவு 66.

கூடுதலுடன் பிரிதலற்று நிர்த்தொந்தமாய்.

சின்மயானந்த குரு 3.

பேதமான
முன்னிலை யொழிந்திட அகண்டிதா காரமாய்
மூதறிவு மேலுதிப்ப

**முன்பினொடு கீழ்மேல் நடுப்பக்கம் என்னாமல்**
**முற்றுமா னந்த நிறைவே**
**என்னிலை யாய்நிற்க இயல்பு கூரருள் வடிவம்**
**எந்நாளும் வாழிவாழி.**

எங்கு நிறைகின்ற பொருள் 11.

**முன்னிலைச் சுட்டொழி நெஞ்சே -** பாயப் புலி 23.

## அத்வைதச் சொற்பிரயோகத்தாலேயே இறைவனை அளத்தல்

தாயுமான சுவாமிகள் 'அத்துவிதம்' என்னும் சொல்லையே வெளிப்படையாகப் பல இடங்களிற் காட்டியிருப்பதும் இந்தச் சீவப்ரம்மாபேதத்தை வலியுறுத்துகிறது.

**யாதொன்று பாவிக்க நான்**
**அதுவாதலா லுன்னை நானென்று பாவிக்கின்**
**அத்துவித மார்க்க முறலாம்.** - எங்கு நிறைகின்ற பொருள் 3.

**அடிமுடியும் நடுவுமற்ற பரவெளி மேற்கொண்டால்**
**அத்துவித ஆனந்த சித்தமுண்டாம் நமது**
**குடிமுழுதும் பிழைக்குமொரு குறைவு மில்லை** - நினைவொன்று 7.

**அத்துவிதம் பெரும் பேறென் றறியாமல்**
**யானெனும் பேயகந்தையோடு**
**மத்தமதி யினர்போல மனங்கிடப்ப**
**இன்னமின்னம் வருந்து வேனோ.** -ஆசையெனும் 9.

**தாழ்வறவென் னுள்ளத்திருந்த தத்துவத்தை அத்துவித**
**சாரந்தன்னை.** -மண்டலத்தின் 4.

**அத்துவித அனுபவத்தை அனந்தமறை**
**யின்னமின்னம் அறியேம் என்னும் நித்தியத்தை** - மண்டலத்தின் 7.

**விட்டுப் பிரியாத மேலான அத்துவிதக்**
**கட்டுக்குள் ஆவதென்றோ காண்** - உடல் பொய்யுறவு 6

**(தொடரும்)**

உ



**अयोध्या मथुरा माया काशी कांची अवंतिका ।**
**पुरी द्वारवती चैव सप्तैते मोक्षदायिका: ।।**

என இந்த பாரத தேசத்தில் கூறப்பட்டுள்ள சப்த மோக்ஷபுரிகளில் முதலாவதான அயோத்யைக்கும் தெற்கே உள்ள ஓரே மோக்ஷபுரியாம் காஞ்சிக்கும் பன்னெடுங்காலமாக பல யுகங்களாக சரித்திரத் தொடர்பு என்பது இருந்து வருகின்றது.



பல யுகங்களாக அயோதிக்கும் காஞ்சிக்கும் தொடர்பு இருந்துள்ளது. சரித்திரத் தொடர்பாக ரகுவம்ச சக்ரவர்த்தியான ஸ்ரீ தசரத மஹாராஜாவிற்கு சந்தான ப்ராப்தம் ஏற்பட ப்ரார்தித்து வர, அவரது கனவில் அவர்களின் குலதெய்வமான அயோத்யாவில் இருக்கும் ஸ்ரீ தேவ்காளி அம்பாள் தோன்றி, காஞ்சீபுரத்தில் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் கோவிலில் ஸ்ரீ காமாக்ஷி அம்மனை தரிசித்து புத்ர காமேஷ்டி யாகம் செய்யும்படியும், நிச்சயம் சத்சந்தான ப்ராப்தம் ஏற்படும் எனவும் ஆசீர்வதிக்க, அவ்வாறே காஞ்சியில் யாகத்தைச் செய்து, அதனால் ப்ரீதியடைந்த காமாக்ஷி தேவி அசரீரி வாக்காக '**भविष्यन्ति मदंशास्ते चत्वारस्तनयानृय**', என்னுடைய அம்சங்களுடன் கூடிய 4 மகன்கள் பிறப்பார்கள் என ஆசீர்வதித்தார்கள். அவ்வாறே அயோத்யாவில் கோசலை, கைகேயி மற்றும் சுமித்திரைக்கு, ராம, பரத, லக்ஷ்மண மற்றும் சத்ருக்னன் ஜனித்தனர்.

அதுமட்டுமில்லாமல் பஞ்சபூதங்களின் தொடர்பாக, சைவத்தில் எவ்வாறு காஞ்சிபுரம் ப்ரிதிவிசேஷத்ரமாகக் கருதப்படுகிறதோ, அதே போல் சாக்தத்தில் (தேவி உபாசனையில்) அயோத்யாவானது ப்ரிதிவிசேஷத்ரமாகக் கருதப்படுகின்றது. '**अयोद्यादिषु पीठषु पृथिव्याधिश्वनुक्रमात्**' இவ்வாறாக ஓர் அரியதான விஷயத்தை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

**'ராமோ விக்ரஹவான் தர்ம:'** என ராமச்சந்த்ர மூர்த்தியானவர் தர்மத்தின் ஸ்வரூபமாக திகழ்பவர் என கூறப்படுகின்றது. தர்மத்தின் ஸ்வரூபமானவருக்கு அவருடைய அவதார

ஸ்தலமான அயோத்தியில் ஓர் கோயில் அமைய பல நூற்றாண்டுகளாக முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

ஸ்ரீ காஞ்சி ஆச்சார்யர்கள் மூவரின் பங்களிப்பும் மிகவும் குறிப்பிடத்தக்கது. ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளும் பல்வேறு சமரச பேச்சு வார்த்தைகளை நடத்தி சமரசமாக தீர்வுகண்டு, ஸ்ரீ ராமபிரானுக்கு கோயில் எழுப்புவதையே தங்களது குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். அவற்றின் ஓர் அங்கமாக 1986ம் வருடம் ஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் ப்ரயாகராஜில் முகாமிட்டிருந்தார், அப்பொழுது, அயோத்யாவில் ராமர் கோவில் நடை திறக்கப்படுகிறதென்று அறிந்து அங்கே நேரில் சென்று விசேஷ பூஜைகள் செய்தார்கள். அதுசமயம் விஷயமறிந்து, காஞ்சிபுரத்திலிருந்து ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீ ராமசந்த்ரமூர்த்திக்கு வெண்குடையும், இரண்டு சாமரமும் ஸ்ரீமடம் சிப்பந்திகள் இருவர் மூலமாக விமானத்தில் அனுப்பி வைத்தார். அவைகளை ஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள் அயோத்தியில் ஸ்ரீராமபிரானுக்கு அர்ப்பணித்தார். அதன் பிறகு 1989ம் வருடம் ஸ்ரீமடத்தில் ஸ்ரீராமர் கோயில் கட்டுவதற்காக ஸ்ரீராம் என்று பொறிக்கப்பட்ட செங்கற்களை ஸ்ரீ காஞ்சி ஆச்சார்யார்கள் ஆசீர்வதித்து விஷ்வ ஹிந்து பரிஷத்தினரிடம் அளித்தனர்.



அதன் தொடர்ச்சியாக ஸ்ரீ அஷோக் சிங்கால், முன்னாள் பாரதப் பிரதமர் ஸ்ரீ அடல் பிஹாரி வாஜ்பேயீ, ஸ்ரீ எல். கே. அத்வானி, ஸ்ரீ ஜார்ஜ் பெர்னாண்டர்ஸ் என பலர் ஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் மீது நம்பிக்கை வைத்து அவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில், சமரச முயற்சிக்கான பல்வேறு கட்ட பேச்சு வார்த்தைகளை ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் மேற்கொண்டார்கள். அனைவரும் கூடி அமர்ந்து பேசினால் மட்டுமே இதற்கு ஓர் சுமுஹமான தீர்வு காணமுடியும் என்பதில் மிகவும் உறுதியாக இருந்தார்கள். இரு சாராருக்கும் ஹிதமாகவும், அதே சமயத்தில் செய்ய வேண்டியதை உறுதியாகவும் எடுத்துரைத்தார்கள். பாரதம் முழுவதும் எந்தவொரு அசாதாரணமான சூழல் ஏற்படாதிருக்கக் காரணம் ஸ்ரீ ஆச்சார்யார்களின் அணுகுமுறையே என அனைத்து தரப்பினரும் திண்ணமாக கூறினர்.

ஸ்ரீ சரணர்கள் கூற்றுபடியே சுமுஹமாக அனைத்தும் ஒப்புக் கொள்ளப்பட்டு, அயோத்தியில் 2020ம் வருடம், ஆகஸ்டு மாதம் 5ம் தேதி, ஸ்ரீராமர் கோயில் கட்டுவதற்கு பூமிபூஜைக்கு நாள் குறிக்கப்பட்டது. அது ஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி



ஸ்வாமிகளின் ஜயந்தி தினமாக அமைந்தது, ஸ்ரீராமர் கோயில் அமைய அவர் எடுத்த முயற்சிகளுக்கு அங்கீகரித்தார் போல் இருந்தது.

அவ்வமயம் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கர விஜயேந்த்ர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அவர்கள் பூமி பூஜைக்கு முக்கியமானதான சங்குஸ்தாபனம் செய்வதற்கு கருங்காலி மரத்தில் நவரத்தினங்கள் பதித்த சங்குவையும் (அடிப்பாகம் சதுரமாகவும், மத்தியில் அறுகோணமாகவும், மேலே தாமரை மொட்டு போல கூர்மையாக முடிவது போல் செய்து), காஞ்சியிலிருந்து 2 செங்கல்களும், ஐந்து தங்கக்காசும் (ஜயா, பத்ரா, நந்தா, ரிக்தா & பூர்ணா), பூமி பூஜை மற்றும் சகலருக்கும் நன்மை கோருகின்ற விவரங்கள் அடங்கிய தாமரைப் பட்டயமும் அவர் அனுப்பி வைத்திருந்தார். அதனை சண்டியாகத்தில் வைத்து பூஜித்து, பிறகு அந்த சங்குவை, காஞ்சியில் உள்ள ஸ்ரீ சங்குபாணி விநாயகர் கோயிலில் வைத்து பூஜித்து (ஸ்ரீ ஆதிசங்கரர் காஞ்சி நகரை புணர்நிர்மானம் செய்வதற்கு முன்னர் இந்த சங்குபாணி விநாயகரை ப்ரதிஷ்டை செய்தார் எனக் கூறப்படுகின்றது), பிறகு ஸ்ரீ மஹாஸ்வாமிகள், ஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள் இருவரின் ப்ருந்தாவனத்தில் வைத்து பிறகு அவை அனைத்தையும் அயோத்திக்கு அனுப்பி வைத்தார். ராமஜன்ம பூமி அறக்கட்டளையினர் ஸ்ரீஆச்சார்ய ஸ்வாமிகள் அனுப்பி வைத்த வைதிக பொருட்களை பெற்றுக் கொண்டு அவர்கள் குறிப்பறிந்து செய்த அனுக்ரஹத்தை நினைத்து பெருமிதப்பட்டனர்.

2023ம் வருடம் காசியில் தனது சாதுர்மாஸ்ய வ்ரதத்தை முடித்துக் கொண்டு, ஸ்ரீசங்கர விஜயேந்த்ர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள், மேற்சொன்னார் போல் சாக்தத்தில் ப்ரிதி விசேஷத்ரமான அயோத்தியில் சாரதா நவராத்ரியை அனுஷ்டித்தார்கள். விஜயதசமிக்கு அடுத்த நாளான ஏகாதசியன்று ஸ்ரீராம் லால்லா சன்னிதிக்கு எழுந்தருளி விசேஷ பூஜைகள் செய்தார்கள். அதன்பிறகு அங்கு நடந்து கொண்டிருக்கும் ஆலய நிர்மாணப் பணிகளை மேற்பார்வையிட்டார்கள். அங்கு குழுமியிருந்த பணியாளர்கள் அனைவருக்கும் ப்ரஸாதமளித்தார்கள். சரயு நதியில் சங்கல்ப ஸ்நானம் செய்து தானங்கள் அளித்து, மாலை தீபோத்ஸவமும் நடத்தினார்கள்.

ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் அயோத்தி ராமர் கோயில் அமைப்பதில் பல ஆலோசனைகள் அளித்து முக்கியப் பங்கு வகித்துள்ளார். ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் கூறியபடியே பிராண பிரதிஷ்டைக்கு நாள் குறிக்கவும் யாகசாலை ஆகிய வைதிக கார்ய க்ரமங்களுக்கு காசியைச் சேர்ந்த ஸ்ரீ கணேஷ்வர சாஸ்திரி திராவிட் என்பவர் நியமிக்கப்பட்டார். ஸ்ரீ ஆச்சார்யாள் கூறியதன் பேரில் காசி ஸ்ரீலஷ்மிகாந்த் மதுரநாத் தீட்சித்(86) தலைமை வகிக்கிறார். இவ்வாறு காமகோடி த்ரிவேணியாக மூன்று ஆச்சார்யர்களும் ஸ்ரீ ராமபிரானுக்கு கோயில் அமைக்கவும், அமைக்கப்படவிருக்கும் கோயிலுக்கு சாஸ்த்ர ரீதியாக அனைத்தையும் ஏற்பாடு செய்து கொடுப்பதையும் தங்களுடைய சேவையாக செய்தனர்.

சாக்ஷாத் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் அவதாரமாக, சப்த மோக்ஷபுரிகளில் ஒன்றான அயோத்யாவில் அவதரித்தவரான, ஸ்ரீராமசந்த்ர மூர்த்திக்கு ஜனவரி, 22ம் தேதி திங்கட்கிழமையன்று, ப்ராண ப்ரதிஷ்டை நடைபெறவுள்ளது. ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள், 2020 அயோத்தியில் பூமி பூஜையையொட்டி, ஸ்ரீராமசந்த்ர மூர்த்திக்கான கோயில் கட்டுமானப்பணி எந்தவொரு விக்னமுமில்லாமல் நடைபெற பக்தர்கள் அனைவருக்கும் ‘ஸ்ரீராம் ஜய ராம் ஜய ஜய ராம்’ எனும் த்ரயோதசாக்ஷரி ராம மந்த்ரத்தை பாராயணம் செய்ய சொல்லி ஆக்ஞாபித்ததை சிரமேற்கொண்டு கும்பாபிஷேகத்தன்று அனைவரும் பாராயணம் செய்து அனவருக்கும் ஸ்ரீராம ப்ரஸாதம் கிடைக்கப் ப்ரார்த்திப்போம்.

ஸ்ரீராம் ஜய ராம் !! ஜய ஜய ராம் !!!
ஸ்ரீராம் ஜய ராம் !! ஜய ஜய ராம் !!!







# ராஜதரங்கிணி 12

பி. ஆர். கண்ணன்

தரங்கம் 5

**சிவ-அர்த்தநாரீஶ்வரர் ஸ்துதி:**

**காப்யேதேஷு ருசி: கசேஷு பணிநாம் பும்ஸ்கோகிலஸ்யேவ தே**
**கோபி: கண்டதடஸ்ய ஹஷ்யதி புரோ த்ருக்பஶ்ய சக்ஷு: ஶ்ருதே: ।**
**ஸந்தாநேபிநவே மிதோ பகவதோர்ஜிஹ்வாப்ருதக்ஸ்பந்திநீ**
**பிந்நார்தாம் ஸத்ருஶாக்ஷராமபி வதந்த்யேவம் கிரம் பாது வ: ।। 1 ।।**

பார்வதி: தங்கள் ஜடையில் பாம்புகளின் சோபை வர்ணனைக்கப்பாற்பட்டது; பாருங்களேன், பாம்பின் கண், குயிலின் குரலைக் கேட்டதுபோல் களிப்பினால் ஜ்வலிக்கிறது. (மற்ற அர்த்தம்: தங்களுக்கு இந்த பாம்புகளை அணிவதில் விசேஷ ருசி; தங்கள் கழுத்திலிருந்து வரும் ஒளிக்கதிர்களினால் பாம்பின் கண் களிப்புறுகிறது; பாம்பிற்குக் கண்ணே செவி.) சிவ-பார்வதியின் ஒன்றுசேர்ந்த இந்த புதிய வடிவில், நாக்கு ஒரே மாதிரி அசைந்து வார்த்தைகளைக் கூறினாலும், அர்த்தங்கள் வெவ்வேறாக உள்ளன. அவை உங்களைக் காக்கட்டும்.

**உத்பல வம்ஶம்**

**ராஜா அவந்திவர்மர்**

இவரின் காலம் காஷ்மீரத்தின் பொற்காலமாக வர்ணிக்கப்படுகிறது. இங்கிருந்து ராஜவம்ஶம் கோநந்த வம்ஶத்திலிருந்து உத்பல வம்ஶமாக மாறுகிறது. உட்பகை கொண்ட பல உறவினர்களை அழித்தார் அவந்திவர்மர். ஏழைகளுக்கும் அந்தணர்களுக்கும் வாரி வழங்கினார். பல அறிஞர்களையும், கவிகளையும் ஊக்குவித்தார் - முக்தாகணர், சிவஸ்வாமி, ஆனந்தவர்த்தனர், ரத்னாகரர் போன்றோரை. ராஜா அவந்திபுரம் என்ற நகரை நிறுவி, அவந்திஸ்வாமி, அவந்தீஶ்வரர் ஆலயங்களைக் கட்டினார். இக்கோவில்களின் இடிபாடுகள் தற்போதும் உள்ளன. த்ரிபுரேஶ்வரர், பூதேஶர், விஜயேஶர் கோவில்களில் வெள்ளியினாலான அபிஷேக அண்டாக்களை ஏற்படுத்தினார்.

ராஜாவின் இரு வளர்ப்பு ஸகோதரர்களும் தங்கள் சரீரத்துடனேயே கைலாஸம் சென்றனர். ராஜாவுக்கும், அவருடைய மந்திரி (வளர்ப்பு ஸகோதரர்) சூரவர்மருக்கும் அதீத ஒற்றுமை இருந்தது. கல்ஹணர் சொல்கிறார்:

**பரஸ்பரமநுத்பந்நமந்யுகாலுஷ்யதூஷணௌ ।**
**ந த்ருஷ்டௌ ந ஶ்ருதௌ வாந்யௌ தாத்ருஶௌ ராஜமந்த்ரிணௌ ।। 63 ।।**

இவ்விருவரைப்போல - ராஜா, மந்திரி - வேறொரு ஜோடியைப் பார்க்கவோ, கேள்விப்படவோ முடியாது. அவர்களுக்குள் கசப்போ, வெறுப்போ இருந்ததில்லை. அதனால் ஜனங்களுக்கு உகந்த நல்ல திட்டங்களைச் செயல்படுத்தினர். பசுவதையை முழுவதுமாக தடை செய்தனர்.

முந்தைய ராஜாக்கள் விவசாயத்திற்கு அதிக முக்யத்வம் தராமலிருந்து விட்டபடியால், விவசாய நிலம் குறைவாக இருந்தது. ஸுய்யர் என்ற ஒரு ஸித்தரின் உதவியினால் ராஜா பல நீர்ப்பாசன திட்டங்களை செயல்படுத்தினார். விதஸ்தா, ஸிந்து நதிகளில் பல அணைக்கட்டுகள், கால்வாய்கள், நதியின் போக்கைத் திருப்பும் ஏற்பாடுகள், கற்களாலான தடைச்சுவர்கள் நிறுவப்பட்டன. லலிதாதித்யருக்குப்பின் இப்போதுதான் இம்மாதிரியான பணிகள் நிறைவேற்றப்பட்டன. ஜயஸ்தலா முதலிய பல க்ராமங்கள் புதிதாக உண்டுபண்ணப்பட்ட நிலத்தில் உண்டாயின.

**கல்ஹணர் புகழ்கிறார்:**

**பூமேர்ஜலாதுத்தரணம் த்விஜக்ஷேத்ரே ததார்பணம் ।**
**ஸேதுபந்தோஶ்மபிஸ்தோயே யமநம் காலியஸ்ய ச ।। 114 ।।**

**சதுர்ஷு ஸித்தமிதி யத்விஷ்ணோ: ஸத்கர்ம ஜந்மஸு ।**
**ஸுய்யஸ்ய தத்புண்யராஶேரேகஸ்மிந்நைவ ஜந்மநி ।। 115 ।।**

விஷ்ணு நான்கு அவதாரங்களில் நிகழ்த்திய செயல்களை - நீரிலிருந்து நிலத்தை மீட்டல், அந்த நிலத்தை உயர்ந்த ப்ராம்மணர்களுக்கு அளித்தல், நீரின்மேல் கற்களைக் கொண்டு பாலம் கட்டுதல், காலியநாகத்தை அடக்குதல் - ஸுய்யர் தன் புண்ய பலத்தினால் ஒரே ஜன்மத்தில் நடத்தினார் என்று. இங்கு கல்ஹணர் விஷ்ணுவின் வராஹ, பரசுராம, ராம, க்ருஷ்ண அவதாரங்களை நினைவுகூர்கிறார். மேலும், மாந்தாதாவைப் போல அரசாட்சி நடத்தி, பூமியில் க்ருதயுகத்தைக் கொண்டு வந்ததாகச்

சொல்கிறார் கவி. ப்ராணவியோக காலத்தில், தன் விஷ்ணுபக்தியை வெளிப்படுத்திய ராஜா விஷ்ணு த்யானத்துடன் உடலை நீத்தார்.

**ராஜா சங்கர வர்மர்**

அவந்திவர்மரின் புத்ரரான இவர் பல ப்ரதேசங்களை யுத்தத்தில் ஜயித்து, நல்ல ராஜாவாகத் திகழ்ந்தார். சங்கரபுரம் என்ற நகரை நிறுவி, சங்கர கௌரீஶர் ஆலயம் கட்டினார். இவருடைய பத்னி ஸுகந்தி, ஸுகந்தீஶ்வரர் கோவிலைக் கட்டினாள். இந்த ஆலயங்கள் ப்ரஸித்தமாக இருந்தவை; இன்றும் இடிபாடுகளைக் காணலாம். ராஜாவின் மந்திரி ரத்னவர்தனேஶர் திறமைசாலியாகவும், பக்திமானாகவும் திகழ்ந்தார்.

ஆனால் காலத்தின் கோலம்! ராஜா கெட்ட வழிகளில் ஈடுபட்டு, நகரங்களையும், ஆலயங்களையும் கொள்ளையடிக்கத் தொடங்கினார். ஜனங்களின் பரிகாஸத்திற்கு ஆளானார். தன் புத்ரர் கோபாலவர்மரின் புத்திமதியைக் கேளாமல் அறிஞர்களை அவமதித்தார். கடைசியில் உட்பகையினால் கொல்லப்பட்டார்.

பின்னர் ராஜாவாகிய கோபாலவர்மர், அவரைப் பின்தொடர்ந்த ஏனைய ராஜாக்களின் காலம் குறுகியதாக இருந்தது. கல்ஹணர் அவர்கள் காலத்தின் கொடுமையை வெகு அழகாகவும் சுருக்கமாகவும் வர்ணிக்கையில்:

**வஸ்து க்ஷணாதநுபபத்த்யுபபத்தியுக்தம் க்ருத்வா ஜடாந்யதி**
**விமோஹயிதும் ஸமர்தா: ।**
**ந ஸ்யுர்விடா அத குதர்கபதஸ்திதாஶ்ச நித்யோத்வஸேஷு**
**நிரயேஷு ம்ருகாஶ்சரேயு: ।। 379 ।।**

துதிபாடுவோர், கோணல் வாதங்களினால், அனுசிதத்தை உசிதமாகக் காட்டி, மதியீனர்களை ஒரே க்ஷணத்தில் மோகிக்கச் செய்யாவிடில், நரகம் எப்போதுமே காலியாக இருக்கும்; விலங்குகள்தான் அங்கு ஸஞ்சரிக்கும் என்று.

(தொடரும்)

# ஆசார்ய பாதுகா ப்ரதிஷ்டை

## திருவிடைமருதூர்

ஸ்ரீ சங்கர பகவத்பாதர் மத்யார்ஜுன க்ஷேத்திரத்தில் ஸ்ரீ மஹாலிங்கத்தினிடமிருந்து 'ஸத்யம் அத்வைதம்' என்ற உண்மையை அநுக்கிரகத்துடன் பெற்றுக் கொண்டு தமது திக்விஜயத்தைத் துவக்கினார்.

ஸ்ரீ பகவத்பாதருக்கு இவ்வாறு ஸ்ரீ மஹாலிங்க ஸ்வாமி 'ஸத்யம் அத்வைதம்' என்று உபதேசித்த பெருமையை மாதவீய சங்கர விஜயத்தின் வியாக்யானமான தனபதிஸூரி இயற்றிய 'டிண்டிமத்திலும்', சிருங்ககிரி பீட வரலாற்றைக் கூறும் 'குருவம்ச காவ்ய'த்திலும் இவைகளுக்கு மூலமான ஆனந்தகிரீயத்திலும், கூறியிருக்கிறது.

நிகழும் சோபக்ருத் வருஷம் கார்த்திகை மாதம் 20-ஆம் தேதி (5-12-1963) பஞ்சமி திதி, புஷ்ய நக்ஷத்திரம், கூடிய புண்ணிய தினத்தில், மத்யார்ஜுனம் என வழங்கும் திருவிடைமருதூரில், ஆசார்ய பகவத்பாதரின் பாதுகா ப்ரதிஷ்டை விழா வெகு விமர்சையுடன் கண்கொள்ளாக் காட்சியாக நடைபெற்றது. இந்த மாதம், ஆரம்ப முதலே எங்கும் - அதிலும் திருச்சி தஞ்சை ஜில்லாக்களில் விடாமல் மழை பெய்து வந்தது. ஆனால் எல்லாரும் வியக்கத்தக்கவாறு திருவிடைமருதூரில் ஆசார்ய பாதுகா ப்ரதிஷ்டை தினத்துக்கு, முதல்தினம் விடியற்காலமே மழை ஓய்ந்து, அன்று சிறிதும் மழையில்லாமல் பல்லாயிரக் கணக்கான மக்கள் விழாவில் சௌகரியமாகக் கலந்து கொண்டு தரிசனம் செய்து பயன் பெற்றனர்.

நம் ஜகத்குரு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் அவர்களும், ஸ்ரீசரணர்கள், ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி அவர்களும் பச்சையப்ப முதலி தெருவில் ஸ்ரீமடம் தங்கியிருந்த இடத்தில், ஸ்ரீ சந்த்ரமௌளீச்வர பூஜையை முடித்துக் கொண்டு வாத்திய கோஷத்துடன், திரளான பக்தர்கள் சூழ, மகாதானத் தெருவில், ஸ்ரீ மகாலிங்க ஸ்வாமி கோயில் அருகே உள்ள மடத்துக்கு எழுந்தருளினார்கள். வேதவல்லுநர்களுடைய உபநிஷத்கோஷம் எங்கும் நிரம்ப, பூர்ணகும்ப மரியாதைகளுடன் ஸ்ரீமத் ஆசார்ய ஸ்வாமிகளை வரவேற்றார்கள்.

1. Anandasrama Series, Poona, pp. 829
2. Vani Vilas Edition. Sarga 3, Slokas 6&7

ஸ்ரீமடத்தின் மேலே தங்கத்தினால் செய்த சிகரத்துடன் கூடின ஸ்தூபியில் ''ஸத்யம் அத்வைதம்'' என்று கூறிக் கைதூக்கிக் காண்பிக்கும் நிலையில் அமைந்துள்ள மகாலிங்க ஸ்வாமியும், அதன் பக்கத்தில் வணக்கத்துடன் அந்த வாக்கியத்தைக் கேட்டு அநுபவிக்கும் நிலையை உருவாக்கின ஸ்ரீபகவத்பாதரின் விக்கிரகமும் மக்களுக்குக்

காட்சியளித்தன. சுபமுகூர்த்த வேளையில் அந்த ஸ்தூபிக்கு அபிஷேகம் விதிப்படி நடைபெற்றது. வேதகோஷமும், வாத்தியகோஷமும், ஜய ஜய சங்கர கோஷமும், வானைப் பிளந்தன. கூடியிருந்த மக்கள் எல்லாரும் பக்திஸாகரத்தில் மூழ்கிக் காணப்பட்டனர். விசாலமான இந்த மடத்தின் நடுவில் கருங்கல் தூண்களுடன் கூடின மண்டபத்தின் மத்தியில் ஸ்ரீ சங்கர பகவத்பாதரின் பாதுகை ப்ரதிஷ்டை நடைபெற்றது. இந்த மத்திய மண்டபத்தைக் கட்டுவதற்கான செலவைத் திருச்சியில் உள்ள, நம்முடைய ஜகத்குருவின் பக்தரான, பல் வைத்தியர் டாக்டர் வெ. சுப்பிரமணிய ஐயர் ஏற்று, அவருடைய தாயார் மீனாக்ஷிசுந்தராம்பாள் அம்மையார் ஞாபகார்த்தமாக ரூபாய் ஐயாயிரம் வழங்கியுள்ளார். டாக்டர் அவர்களுடைய பக்தியையும் நன்கொடையையும் எல்லாரும் மெச்சி வாழ்த்தினர். பிறகு ஆசார்ய ஸ்வாமிகள் அந்தப் பாதுகைக்கு அபிஷேகம் செய்து, 108 சால்வைகளைக் கொண்டு அர்ச்சனையும் செய்தார்கள். இந்தக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. பகவத்பாதருடைய பாஷ்யத்தில் சுருக்கமாகவும் அழகாகவும் கம்பீரமாகவும் உள்ள வாக்கியங்களில் ஒவ்வொன்றுட னும் 'நம:' என்பதைச் சேர்த்து, ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் சொல்ல, அதை அங்கே கூடியிருந்த மக்கள் எல்லாரும் சேர்ந்து சொல்ல, ஒவ்வொரு சால்வையாகப் புஷ்பத்துடன் பகவத்பாதருடைய பாதுகைகளில் அர்ப்பித்தார்கள். பூஜை முடிந்ததும் மத்யார்ஜுன க்ஷேத்திரத்தின் மகிமையையும் ஸ்ரீ மகாலிங்க ஸ்வாமி உபதேசித்த 'ஸத்யம் அத்வைதம்' என்ற ஆசார்ய பாதுகா ப்ரதிஷ்டை வாக்கியத்தின் பெருமையையும் ஸ்ரீ ஜகத்குரு அவர்கள் எடுத்துரைத்தார்கள். அவர்களுடைய பொன்மொழிகளை கேட்டு மக்கள் பக்தி பரவசமடைந்தனர்.

பகவத்பாதருடைய ப்ரஸ்தானத்ரயத்தையும் சாந்தி புரஸ்ஸரமாகப் படித்தவர்களும், இந்த மூன்று தினங்களிலும் நடந்த வித்வத் வாக்கியார்த்தங்கள் சொன்னவர்களுமான பிரபல சாஸ்த்ர ஸதஸ்ஸில் பண்டிதர்கள் சுமார் 70 பேர்களுக்குப் பகவத்பாதரின் பாதங்களில் அர்ப்பித்த சால்வைகளை ஜகத்குரு அவர்கள் வழங்கி, சம்பாவனை, ரயில் செலவுகளும் கொடுத்து அநுக்கிரகித்தார்கள்.

அத்துடன் அத்வைத ஸபையின் மாஜி காரியதரிசி ஸ்ரீ S. மகாலிங்க ஐயர், தற்காலக் காரியதரிசி, ஸ்ரீ நாராயணஸ்வாமி ஐயர், கூட்டுக் சரியதரிசி ஸ்ரீ K. பாலசுப்பிரமணிய ஐயர், ஆகியோருக்கும் ஆசார்ய ஸ்வாமிகள் சால்வைகளை வழங்கினார்கள்.

இந்த மண்டபம் இருபத்திரண்டு வருஷங்களுக்கு முன்பு கட்ட ஆரம்பித்துக் கட்டிடம் பூர்த்தியாகாமல் இருந்த நிலையை மாற்றி, இதற்கு வேண்டிய நிதியையும் திரட்டி, அதே வேலையாக நின்று, மிகுந்த ஊக்கத்துடன் கட்டி முடித்தவர் ரிடையர்ட் அகவுண்ட்ஸ் ஆபீஸரான ஸ்ரீ R. மகாலிங்கய்யர் ஆவார். அன்னாரின் பக்தியைப் பெரிதும் பாராட்டி,

அவரைப் பூர்ணமாக ஆசீர்வதித்து, அவருடைய தொண்டை வெகுவாக மெச்சி, அவருக்குத் தக்க மரியாதையாகச் சால்வையும் கொடுத்து ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் அநுக்கிரகம் செய்தார்கள்.

ஸ்ரீ சங்கர பகவத்பாதர் முதல் அனவச்சின்னமாகத் தொடர்ந்து வரும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்துக் குருபரம்பரையின் மகிமையையும், ஆசார்யர்களின் பெருமையையும், இந்த விழாவின் சிறப்பையும் பற்றி, தர்மரக்ஷாமணி ஸ்ரீ K. பாலசுப்பிரமணிய ஐயர் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். அதன் சுருக்கமாவது:

இந்த விழா வெகு சிறப்பாக நடந்தேறியது. மக்களின் மனத்தில் சாந்தியும், ஆன்மிகத் துறையில் ஈடுபாடும் நிறைந்து காண்கின்றன. ஸ்ரீ சங்கர பகவத்பாதர் ஸ்தாபித்த ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தை அலங்கரிக்கும் ஸ்ரீ ஜகத்குரு அவர்களுடைய திவ்ய தரிசனத்தையும், அவர்களுடைய அநுக்கிரகத்தையும் பெற்ற மக்கள் ஆத்மலாபத்தை அடைந்தனர் என்பதில் ஐயமில்லை. ஸ்ரீ சங்கர பகவத்பாதரின் மகிமையைப்பற்றி ஸ்ரீ பத்மபாதாசார்யர் பஞ்சபாதிகா கிரந்தத்தில் பின் வருமாறு கூறுகிறார்:-

**ब्रह्मविदां एकपुण्डरीकस्य लोकानुग्रहैकरसतया कृतशरीरस्य भगवतः भाष्यकारस्य वचनं आगमयितव्यं**
ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்தினால் ப்ரஹ்ம தத்வத்தை அறிந்த பரமஞானிகளுக்குள் தலைசிறந்தவராய், வெண்தாமரையைப் போல் விளங்குகின்றவரும், உலக க்ஷேமத்தையே குறிக்கோளாகக் கொண்டு அவதரித்தவரும், பகவான் பாஷ்யகாரர் என்ற புகழ் பெற்றவருமான ஸ்ரீ சங்கர பகவத்பாதரின் வசனங்களை வேதவாக்கியமாகக் வேண்டும்.

நாடு முழுவதும் பாதயாத்திரையாகவே சென்று, பல க்ஷேத்திரங்களுக்கு விஜயம் செய்து, முக்கிய இடங்களான காசி, ஸ்ரீநகர், பதரி, கேதாரம், காஞ்சி, மத்யார்ஜுனம், திருச்செந்தூர், ராமேசுவரம் முதலிய ஸ்தலங்களுக்குச் சென்று சநாதன தர்மத்தின் பல பகுதிகளின் ஒற்றுமையை நன்கு வளர்த்து, அவைதிகமான கொள்கை நடவடிக்கைகளை நீக்கி, தொன்றுதொட்டுள்ள தர்மத்துக்குப் புத்துயிர் அளித்த பகவத் பாதரின் பெருமையை நாம் நன்றாகத் தெரிந்துகொள்ள இப்போது 68-ஆம் பீடத்தில் ஜகத்குருவாக விளங்கும் ஆசார்ய ஸ்வாமிகளின் லோகாநுக்ரஹ ரூபமான பல காரியங்களை நாம் பார்த்து, இதிலிருந்து பகவத்பாதருடைய மகிமையை உணர முடிகிறது என்றுள்ள நினைவிலேயே மக்கள் விழாவினின்றும் திரும்பினர்.

கலியினால் ஏற்பட்டுள்ள சூழ்நிலையைத் தடுத்து, இதுபோன்ற அரும்பெரும் பணிகளைப் புரிந்து நம்முடைய ஆசார்ய ஸ்வாமிகள் பாரத தேசத்தைப் புனருத்தாரணம் செய்து தர்மத்தை நிலைநாட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை என்று நம்புகிறோம்.

# முகாம் நிகழ்ச்சிகள்

*முகாம் நிகழ்ச்சிகள் தொடர்ச்சி*

23.12.23 - பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் ஹைதராபாத் மல்கஜ்கிரி ஆனந்தபாக் பிருந்தாவன் கார்டன் இடத்தில் இரண்டாவது ஆண்டு சமுஹிக ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரநாம ஸ்தோத்திர பாராயணத்திற்கு வருகை தந்து அனுக்ரஹித்ததுடன் வெங்கடேஸ்வர சுவாமி திருக்கோவிலுக்கும் விஜயம் செய்தார்கள்.

04.01.23 - இன்று பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் வேத வித்யார்த்திகளுடன் கலந்துரையாடியது பார்க்க பரவசவத்துடனிருந்தது. வித்யார்த்திகள் அவர்தம் பயின்ற வேதத்திலிருந்து ஒரு பகுதியை கூற கோரும்போது பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் நேர் காண்பதில் தகப்பனாராகிறார். வித்யார்த்திகள் வேத பாராயணம் செய்யும் போது அவர்களுடன் இணைந்து தாயின் அணைப்பில் உள்ளதாக உணருகிறார்கள். தாயின் புன்னகை, தந்தையின் நேத்திரங்கள மற்றும் குரலில் குருவாகவும் விளங்குகிறார்.

பூஜ்ய ஸ்ரீ ஆசார்யாள் பாராயணத்திற்கு இடையே குழுவினிரின் சுறுசுறுப்பையும் மேலும் 5 அல்லது 6 நபர்களை சேர்த்து கூட்டாக சேரும்போது ஒத்து இருப்பதையும் கண்டார்கள். வித்யார்த்திகளின் குரல், பாணி மற்றும் அங்க அசைவுகளையும் காண முடிந்தது.



என்னைப் போன்று சாதாரணமானவர்கள் இந்த கடின பணியை பார்க்கும்போது அவர்களின் கவனம், முன்னிருத்தல் மற்றும் வேதம் பயில்வதில் வைராக்கயம் இவைகள் சுலபமானது இல்லை.

**08.1.24 - மஹாஸ்வாமிகள் ஆராதனை நிகழ்ச்சி**

மாலை 6 மணியளவில் அலங்கரிக்ப்பட்ட ரதத்தில் பூஜ்ய ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் உருவப்படம் ஊர்வலமாக ஸ்கந்தகிரி முகாமிலிருந்து சுவராஜ்யா பிரஸ் வரை ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு புறப்பட்டது.

வானிலை குளிர்ச்சியாக இருந்த போதும் ஊர்வலம் உற்சாகத்துடன் ஆன்மீகத்தையும் பரப்புவதாக அமைந்தது. இளம் வித்யாத்திகள் வேத மந்திரங்கள் ஒலிக்க முன் செல்ல சம்பிரதாயா பள்ளி மாணவர்வகள் கோலாட்டம் ஆடி காண்பித்தார்கள். அவர்களுடன் சம்பிரதாயா ஆசிரியர்கள் மற்றும் பெங்களூரிலிருந்து வந்திருந்த பக்தர்கள் கோலாட்டத்தில் கலந்து கொண்டது வயது ஒரு பொருட்டல்ல என்பது போல் இருந்தது. சாலையின் இருபுறமும் உள்ள வீட்டு பெண்மணிகள் ஆரத்தி எடுத்தும் அவர்கள் கொணர்ந்த அகல் விளக்கு நிகழ்ச்சி நடக்கும் இடம் சேரும் வரை வரப்பெற்றது.

குழந்தைகளும் பெரியோர்களும் சனாதன தர்மத்தையும், தர்மத்தையும் தெரிவிக்கும் செய்திகளை கொண்ட விளம்பரங்களை ஏந்தி வந்தார்கள். பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் ரதத்திற்கு பின்னால் உண்மை விரும்பிகளை ஆசிர்வதித்த்த வண்ணம் வந்தார்கள். காமகோடி பீடத்தின் 68வது பீடாதிபதிகளின் 30வது ஆராதனை நடைபெறும் சுவராஜ்ய பிரஸ் இடத்திற்கு ஊர்வலம் வந்து சேர்ந்தது.

9.1.24 - இன்று பிரதோஷ நாள் என்பதால் பூஜை அறையில் இடைவெளியின்றி பக்தர்கள் அமர்ந்து பூஜையை ருத்ர பாராயணத்துடன் கண்டுய்தார்கள். அபிஷேகம் முடிந்த பின்னர் பதஞ்சலி ஸ்தோத்திரம் பக்த பெருக்குடன் பாராயணம் செய்யப்பட்டது.

8.30 மணியளவில் ஆரத்தி நடைபெற்றது. எண் திசைகயிலும் அவர்தம் பூரிப்பு பிரதிபலிக்கிறது. கற்பூரத்திலிருந்து வரும் ஒளியானது மண்டபத்தின் அழகை பிரகாசிக்கச் செய்கிறது. அறிவு என்கிற கற்பூரம் தாமாக ஒளிவிடும்போது சந்திரளெலீஸ்வரரின் அனுக்ரஹம் இப்பிரதோஷ வேளையில் நம் எல்லோர் மேலும் விழும் போது சஞ்சலங்கள் பிராரப்த கர்மாக்களால் ஏற்படும் தோஷங்கள் அழிக்கப்படுகின்றன.

20.1.24 - வாழ்க்கையில் இன்ப துன்பங்கள் நிரந்தரமானவை என்றாகிலும் அவைகள் தாமரை இலை தண்ணீர் போல விலக வேண்டி பக்தர்கள் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் அனுக்ரஹம் பெற காத்திருந்தனர். அவர்கள் தங்கள் துன்பங்களை பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் பாதங்களில் கொட்டித் தீர்க்க எண்ணினார்கள். ஆனால் அவர்கள் சுவாமிகளின் அருகில் தரிசனம் செய்ய நெருங்கும் போது தங்களின் துன்பங்களை கஷ்டப்பட்டு தெரிவித்தார்கள். சுவாமிகளின் புன்னகை, ஒளிவிடும் நேத்திரங்கள், அனுக்ரஹிக்கும் ஹஸ்தங்கள் வாழ்க்கையில் ஏற்படும் இடர்பாடுகள், இன்னல்கள் உருகி விலகுவதாக காணப்பட்டது.

**21.1.24 - பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அயோத்தி விஜயம்.**

பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் 10.45 மணிக்கு அயோத்தி விமான நிலையத்திற்கு வந்திறங்கியபோது ஸ்ரீ கிருஷ்ண கோபால்ஜி சுவாமிகள் வரவேற்று அவர்களுடன் சங்கரமடம் வரை உடன் வந்தார். அங்கே ஸ்ரீ பையாஜி ஜோஷி ஸ்வாமிகளுடன் சேர்ந்து கொண்டார்கள். பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமிகள் விமான நிலையத்திலிருந்து நேராக ஸ்ரீ ராமபிரானின் குல தெய்வமான தேவ காளி திருக்கோவிலுக்கு விஜயம் செய்து பூஜைகள் முடித்து சங்கர மடம் எழுந்தருளினார்கள். சங்கர மடத்தில் உள்ள ஸ்ரீ ராமர் சந்நிதியில் ராம சடாக்ஷரி ஹோமம் நடைபெற்று பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் ஸ்ரீ ராமர் சந்நிதியில் கலசாபிஷேகம் செய்வித்தார்கள். பூஜ்ய ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் சங்கரமடத்தில் ஸ்ரீ ராமர் சந்நிதியை தோற்றுவித்தார்கள். அயோத்தி சங்கரமடத்திற்கு வலைதளம் ஒன்றும் துவக்கி வைக்கப்பட்டது.

பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் ராம ஜென்ம பூமிக்கு விஜயம் செய்த போது யக்ஞ சாலையில் ஸ்ரீ கோவிந்ததேவ் மஹராஜ் அவர்களால் ஸ்ரீ கணேஷ்வர் டிராவிட், ஸ்ரீ லக்ஷ்மிகாந்த் தீக்ஷித் மற்றும் வேத வித்வான்களால் பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்கப்பட்டார்கள். பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் யக்ஞ சாலையை சுற்றி வந்து கலசங்களுக்கு புஷ்பங்கள் சமர்ப்பித்தார்கள். பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் நடுவில் உள்ள பிரதான கலச இடத்திற்கு வேத மந்திரங்கள் முழங்க வருகை தந்து ஹாரத்தி செய்வித்தார்கள். பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் ராம் பகவான் மீதான பிரத்யேக மந்திரங்கள் ஜபித்து பின்னர் கோவிலுக்கு புறப்பட்டார்கள். நுழைவதற்கு முன்னதாக முதற்படியில் தேங்காய் உடைக்கப்பட்டது, தொடர்ந்து ஸ்ரீ கணேஷ் உருவம் பொதித்த இரண்டு ஸ்தம்பங்களுக்கு முன்னர் இரண்டு தேங்காய்கள் உடைக்கப்பட்டன. பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் உள்ளே மஹா மண்டபம், அர்த்த மண்டபம் வழியாக கர்ப்பக்ருஹத்திற்கு வருகை தந்தார்கள். ஸ்ரீ கோவிந்த தேவ் மஹராஜ் மற்றும் சம்பட்ராஜ் ஆகியோர் பூஜ்ய ஸ்ரீ சுவாமிகளை வரவேற்றார்கள். விக்ரஹத்திற்கு கண் திறக்கும் நிகழ்வு தொடங்கியது. பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் விக்ரஹத்திற்கு பிரத்யேக ஆபரணங்கள் வழங்கினார்கள். பின்னர் அர்த்த மண்டபத்தில் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் வைதீகர்களுக்கு சால்வைகள் வழங்கி கௌரவித்தார்கள். மீண்டும் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் யக்ஞ சாலைக்கு வருகை தந்து பின்னர் விமான நிலையத்திற்கு திரும்பினார்கள்.

முன்னதாக ராம் மந்திருக்கு வரும் வழியில் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் ப்ராண பிரதிஷ்டை நிகழ்ச்சியின் பொருட்டு ஸ்ரீ கணேஷ்வர் சாஸ்திரி டிராவிட் மற்றும்

ஸ்ரீ லக்ஷ்மிகாந்த் தீக்ஷித் தலைமையில் நடைபெறும் வைதீக கார்யங்கள் குறித்து கேட்டறிந்தார்கள். இந்த தெய்வீக சுப நிகழ்வு தருணத்தில் அனைத்து தர மக்களுக்கும் ஆரோக்யமும், சுபீக்ஷமும், கல்வி யோக்யதாம்சங்களும் கிடைக்க பிரார்த்தித்தார்கள்.

அயோத்யா சென்று திரும்பிய பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் ஸ்கந்தகிரி ஸ்ரீ மடம் முகாமில் பக்தர்களால் விமரிசையாக வரவேற்கப்பட்டார்கள். அது சமயம் ஜெய் ஸ்ரீராம் கோஷம் விண்ணில் அதிர்ந்தது. குழுமியிருந்த பக்தர்களுக்கு ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி தேவாலய பிரசாதங்கள் வழங்கப்பட்டன. அதே நேரம் காஞ்சிபுரத்தில் பூஜ்ய ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி மஹா ஸ்வாமிகள் மற்றும் பூஜ்ய ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பிருந்தாவனங்களில் கற்பூர ஹாரத்தி காணொலி காட்சி வாயிலாக ஒளிபரப்ப்பட்டது.

பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் ஆருளாசியுடன் அவர்கள் முன்னிலையில் ஸ்ரீ சீதாராம கல்யான மஹோத்ஸவம் ஸ்கந்தகிரி ஸ்ரீ மடத்தில 22.1.24 ஆன்று காலை நடைபெற்றது. பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் ஸ்ரீ ராம தர்பாருக்கு விசேஷ அபிஷேகங்களும், பூஜைகளும் செய்வித்தார்கள்.

ஹைதராபாத் கொண்டபூர் எனும் இடத்தில் உள்ள ஸ்ரீ ராமாலயத்தில் ஸ்ரீ ராம பிரதிஷ்டா வைபவம் இரவு 7 மணியளவில் விஜயம் செய்து அனுக்ரஹித்தார்கள்.

செகந்தராபாத் ஸ்கந்தகிரி ஹனுமான் திருக்கோவிலில் ஸ்ரீ சீதாராம கல்யாண மஹோத்ஸவம் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் முன்னிலையில் 22.1.24 காலை 9.00 மணி முதல் நடைபெற்றது.

**இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்**
**பெருமை பிறங்கிற்று உலகு**

*இவ்வுலகில் வாழ்ந்திருக்கும் காலத்திலேயே நிலையான பேரின்பம், நிலையற்ற சிற்றின்பம் ஆகியவற்றைப் பகுத்துத் தெளிவாக ஆராய்ந்து நிவ்ருத்தி தர்மம் எனப்படும் துறவு வாழ்க்கையை மேற்கொண்டவர்களுடைய பெருமையே உலகில் மிகச் சிறந்ததாக விளங்கிக் கொண்டிருக்கிறது.*

*(குறள் : 23)*

*விருப்பு - வெறுப்பு எனும் இருமைகளை வென்றவனே துறவி என அறிய வேண்டும். அவன் வாழ்வில் இருமைகளில் இருந்து எளிதில் விடுபடுகிறது.*

***(ஸ்ரீமத் பகவத்கீதை 5:1)***

# மாசி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| 20-02-2024 | செவ்வாய் | ஏகாதசி |
| 21-02-2024 | புதன் | த்வாதசி ; ப்ரதோஷ பூஜை |
| 23-02-2024 | வெள்ளி | பௌர்ணமி பூஜை |
| 01-03-2024 | வெள்ளி | ஸ்வாதி வேத பாராயணம் |
| 02-03-2024 | சனி | அனுஷம் தேர் |
| 03-03-2024 | ஞாயிறு | அனுஷம் வேத பாராயணம் |
| 04-03-2024 | திங்கள் | மூலம் தேர் |
| 05-03-2024 | செவ்வாய் | மூலம் வேத பாராயணம் |
| 06-03-2024 | புதன் | ஏகாதசி ; உத்ராடம் தேர் |
| 07-03-2024 | வியாழன் | ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி விஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஜயந்தி த்வாதசி ; உத்ராடம் வேத பாராயணம் |
| 08-03-2024 | வெள்ளி | ப்ரதோஷ பூஜை ; மஹா சிவராத்திரி அவிட்டம் தேர் ; அவிட்டம் வேத பாராயணம் |
| 16-02-2024; 23-02-2024 ; 01-03-2024; 08-03-2024 வெள்ளிக்கிழமை பூஜை மாலையில் ஸ்ரீமஹாத்ரிபுரசுந்தரி சமேத ஸ்ரீசந்த்ரமௌலீஸ்வரருக்கு விசேஷ அபிஷேக பூஜை | | |

# அத்வைத ஆச்சார்ய பரம்பரை 17

## ஸ்ரீ ஹஸ்தாமலகர்

ஸ்ரீ ஸுரேஸ்வரர், ஸ்ரீ பத்மபாதர் இருவருக்கும் ஸ்ரீ சங்கர சிஷ்ய பரம்பரையில் தனி மகத்துவம் உண்டு. பல அரிய பெரிய நூல்களும் உரைகளும் எழுதி முத்திரை பதித்தவர்கள் இவர்கள். ஹஸ்தாமலகர், தோடகாசாரியார் இருவரும் பெரிய நூல்கள் எழுதாவிடினும் ஸ்ரீ சங்கர சிஷ்ய பரம்பரையில் முக்கியமான ஸ்தானம் வகிப்பவர்கள். ஹஸ்தாமலகரின் 12 சுலோகங்களைக் கொண்ட 'ஹஸ்தாமலகீயம்' எனும் சிறிய நூல் அத்வைத வேதாந்தத்தின் ஸாரமாகக் கருதப்படுகிறது. தன் சீடருடைய இந்நூலுக்கு ஸ்ரீ சங்கரர் உரையெழுதியிருப்பது இந்நூலின் பெருமையைப் பறை சாற்றுகிறது. ஹஸ்தாமலகரின் அத்வைத அனுபூதி நிஷ்டையின் வெளிப்பாடு இந்த ஸ்லோகங்கள். எனவே இது ஸமாதி பாஷா.

ஸ்ரீ சங்கர பகவத்பாதர், சிஷ்யர்களும், பக்தர்களும் புடை சூழ திக்விஜயம் செய்து வருகிறார். மூகாம்பிகை க்ஷேத்ரமான கொல்லூரில் முகாமிட்டுள்ளார். அது சமயம் உடுப்பி அருகிலிலுள்ள 'ஸ்ரீ வள்ளி' கிராமத்தைச் சேர்ந்த அந்தணர்கள் ஸ்ரீ ஆசார்யரைத் தங்கள் கிராமத்திற்கு விஜயம் செய்யும்படி வேண்டினர். அவர்களது கோரிக்கையை ஏற்று ஸ்ரீ சங்கரர் அந்த கிராமத்திற்குச் சென்றார். அங்குள்ள அனைவரும் அக்னி ஹோத்ரிகளாயிருப்பதைக் கண்டு அகமகிழ்ந்தார். அங்கு பிரபாகர சர்மா என்ற அந்தணர் தனது 13-வயது மகனுடன் (சிலர் 7- வயது எனக் குறிப்பிடுகின்றனர்) வந்து தரிசித்தார். இவர் கற்றவர். கற்றபடி நிற்பவர். செல்வந்தர். ஸ்ரீ ஆசார்யாளிடம் தனக்குள்ள மனக்குறையைக் கூறி வருந்தினார். நீரே கதி எனச் சரணடைந்தார்.

'இவன் எனது குமாரன். பிறந்தது முதற்கொண்டு ஜடம் போலவே இருக்கிறான். மூளை வளர்ச்சி இல்லாதவன் போல் காணப்படுகிறான். உபநயனம் செய்து வைத்தால் சரியாகி விடும் என்று பலர் கூறினார்கள். உபநயனம் ஆன பிறகும் அப்படியே இருக்கிறான். தாங்கள் அனுக்ரஹிக்க வேண்டும். இவனுக்கு ஒரு வாழ்வு கொடுக்க வேண்டும்' என்று கூறி அழுதார். தன் மகனை நமஸ்கரிக்கச் சொன்னார்.

‘இவனுக்கு எதிலும் நாட்டமில்லை. ஊணிலும் நாட்டமில்லை. உறக்கத்திலும் நாட்டமில்லை. விளையாட்டிலும் நாட்டமில்லை. கல்வி கற்பதிலும் நாட்டமில்லை. எப்போதும் தனித்தே இருக்கிறான். மோனத்தில் இருக்கிறான். இன்று வரையில் வாய் திறந்து பேசியதில்லை. வெறிக்கப் பார்த்துக் கொண்டு இருக்கிறான். சிரிப்பதுமில்லை, அழுவதுமில்லை, மகிழ்வதுமில்லை, வருந்துவதுமில்லை’ என வருந்தினார்.

தனது திருவடிகளில் நமஸ்கரிக்கும் அந்தண குமாரனைப் பார்த்து, ‘நீர் யார்? ஏன் இவ்வாறு ஏதோ க்ரஹத்தால் பீடிக்கப்பட்டவன் போல் காணப்படுகிறாய்’ என்று கேட்டார். ஸ்ரீ ஆசார்யாளின் திருவடி நிழலிலிருந்து எழுந்தான். மடை திறந்த வெள்ளம் போல் சுலோகங்களைப் பொழிய ஆரம்பித்தான். ஸ்ரீ சங்கர பகவத்பாதருக்குத் தான் நர்மதை நதிக்கரையிலிருந்த ஸ்ரீ கோவிந்த பகவத்பாதரை நமஸ்கரித்த காலத்து, தான் கூறிய தசச்லோகீ நினைவிற்கு வந்தது. ‘நான்’ யார் என்பதை ‘பளிச்’சென உபநிஷத் பிரமாணங்களுடன் சொல்லி நமஸ்கரிக்கவும், ஸ்ரீ சங்கரர் ஆனந்த பரவசரானார்.

**‘கஸ்த்வம் சிஶோகஸ்ய குதோऽஸி கந்தா**
**கிந்நாம தேத்வம் குத ஆகதோऽஸி ।**
**ஏதன் மயோக்த மவதச்சார் பகத்வம்**
**மத்ப்ரீதயே ப்ரீதி விவர்த்த நோऽஸி ॥**

‘யார் நீ? நீ யாருடைய குழந்தை? நீ கட்டுப்பட்டவனா? உன் பெயர் என்ன? எப்போது வந்தாய்? குழந்தாய் ! என் கேள்விகளுக்கு உன்னிடமிருந்து பதிலை எதிர்ப்பார்க்கிறேன். என்று இவ்வாறு ஸ்ரீ ஆச்சார்யாள் பிராம்மண குமாரனைக் கேட்டார். வாய் திறந்து பேசாத அவன் அப்போது பதில் கூறினான்.

**நாஹம் மனுஷ்யோ ந ச தேவ யக்ஷௌ**
**ந ப்ராஹ்மண க்ஷத்ரிய வைஶ்ய சூத்ரா: ।**
**ந ப்ரஹ்மசாரீ ந க்ருஹீ வனஸ்த்தோ**
**பிக்ஷுர் நசாஹம் நிஜபோதரூப: ॥**

நான் மனுஷ்யனல்ல, தேவனல்ல, யக்ஷனுமல்ல, ப்ராஹ்மணனல்ல, க்ஷத்ரியனல்ல, வைஶ்யனல்ல, சூத்ரனுமல்ல, நான் ப்ரம்மச்சாரியல்ல, இல்லறத்தானல்ல, வானப்ரஸ்த்தனோ அல்லது ஸந்யாஸியோ அல்ல. நான் கேவல அறிவு மாத்திரமான சித்சொரூபன்.

**நிமித்தம் மநஸ்சக்ஷுராதி ப்ரவ்ருத்தௌ**
**நிரஸ்தாகிலோபாதி ராகாச கல்ப : ।**
**ரவிர்லோக சேஷ்டா நிமித்தம் யதாய:**
**ஸ நித்யோபலப் தி ஸ்வரூபோऽஹமாத்மா ॥**

'உலகிலுள்ள எல்லா உயிர்களின் இயக்கங்களுக்கும் சூரியன் நிமித்த காரணனாகக் கருதப்படுகிறான். இது போன்றே மனம், கண் முதலான இந்திரியங்கள் அனைத்தின் இயக்கங்களுக்கும் அழியாத அறிவு வடிவான ஆத்மா நிமித்த காரணமாகிறது. அந்த ஆத்மாவே நான். உடல், மனம், புலன்கள் இவற்றோடு தொடர்பு இல்லாத காலத்தில் நான் கேவல ஆகாசம் போல் எதிலும் பற்றற்றவனாயிருக்கிறேன்'.

அனுபவத்தின் வெளிப்பாட்டை மற்றொரு அனுபவ ஞானிதானே உணர முடியும்! ஸ்ரீ சங்கரர் அந்தண குமாரனின் நிலை உணர்ந்தார். இவன் இல்லத்திலிருக்கத் தகுதியற்றவன் என்றறிந்தார். பெற்றோர் சம்மதத்துடன் தன்னுடன் அழைத்துச் சென்றார். ஸ்ரீ சங்கரரின் பிரதான சீடர்களுள் ஒருவரானார். ஆனந்த பிரகாசர் என்பவரும் ஸ்வயம்பிரகாசர் என்பவரும் 'ஹஸ்தாமலகீய'த்திற்கு உரை எழுதியுள்ளனர்.

இவை தவிர ஆசிரியர் யார் என்று அறியாத இரு விசேஷ உரைகளும் பிரஸித்தமாக இருக்கின்றன.

உள்ளங்கையில் நெல்லிக்கனிபோல் பிரத்யக்ஷமாகவும் தெளிவாகவும் ஆத்ம தத்துவத்தை இச்சிறிய நூல் வெளிப்படுத்துவதால் இது 'ஹஸ்தாமலகீயம்' எனப்பட்டது. ஹஸ்தம் - கை, ஆமலகம் - நெல்லிக்கனி. உள்ளங்கையில் நெல்லிக்கனி போல் என்று பொருள். இவ்வரிய பொருளுரைத்த குமாரனும் ஹஸ்தாமலகர் என்று அழைக்கப்பட்டார்.

இது தொடர்பாக ஒரு கர்ண பரம்பரைக் கதை வழங்கப்படுகிறது. ஒரு நாள் ஹஸ்தாமலகர் இரண்டு வயது குழந்தையாயிருக்கும் போது, தாயார் குழந்தையுடன் நதிக்கு நீராடச் சென்றார். ஆற்றின் கரையில் ஒரு மரத்தடியில் கண்மூடி தியானத்தில் ஆழ்ந்திருந்த ஒரு யோகியைக் கண்டார். தனது குழந்தையைக் கண்காணித்துக் கொள்வார் என்று கருதி அவர் ஸந்நிதியில் குழந்தையை விட்டு விட்டு நீராடச் சென்றாள். சிறிது நேரம் கழித்து தாயைத் தேடிய குழந்தை மெதுவே நடந்து சென்று ஆற்றில் விழுந்து விட்டது. நீராடி வந்த தாயார் குழந்தையைக் காணாது தவித்தாள்,

அலறினாள், புலம்பினாள். இந்த அரவத்தில் கண்விழித்த யோகி நடந்தவை அறிந்தார். எவ்வளவு முயன்றும் தாயாரைத் தேற்ற முடியவில்லை. நீரில் இறங்கினார். தன் உடலை விட்டார். குழந்தையின் உடலில் புகுந்தார். நீரிலிருந்து குழந்தையாக எழுந்து வந்தார். தாயார் அக மகிழ்ந்தாள். இல்லம் சென்றாள். ஆனால் குழந்தையின் நடத்தையில் மாறுதலைக் கண்டாள். மகன் உயிருடன் மீண்ட மகிழ்ச்சியில் எதனையும் கண்டு கொள்ளவில்லை.

ஸ்ரீ சங்கர பகவத்பாதர் கண்டு கொண்டார். ஞானி உள் புகுந்திருப்பதை உணர்ந்தார். துறவறமளித்தார். தனக்கு அத்யந்த சிஷ்யனாக்கிக் கொண்டார். ஸ்ரீ சங்கரருடன் திக்விஜய யாத்திரை மேற்கொண்டார் ஹஸ்தாமலகர்.

அத்வைத ஸித்தாந்தத்தின் ஸாரஸங்க்ரஹமாயிருப்பது ஹஸ்தாமலகீயம். ஹஸ்தாமலகர் 'ராமதீர்த்த யதி' எழுதியுள்ள ' வேதாந்த ஸாரம்' எனும் நூலுக்கு 'வித்வான் மநோரஞ்ஜனி' என்ற பெயரில் ஒரு உரை எழுதியுள்ளதாக அறியப் படுகிறது. இவரை துவாரகா பீடத்திற்கு முதல் பீடாதிபதியாக ஸ்ரீ சங்கரர் நியமித்ததாகக் கருதப்படுகிறது.

...வளரும்.

**உரன்என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்**
**வரன்எனும் வைப்பிற்குஓர் வித்து**

*திட்பம் மிக்க அறிவு எனும் அங்குசத்தினால், மனதைச் சார்ந்து இயங்குகின்ற ஐம்பொறிகளாகிய ஐந்து யானைகளையும் கட்டுப்படுத்தி நெறிப்படுத்துபவன் உயர்ந்ததாகக் கருதப்படுகின்ற பேரின்பத்திற்கு சிறந்த காரணமாய் விளங்குகிறான்.*

*(குறள் : 24)*

*புலனடக்கத்தால் அடங்கியவர்கள் அதனால் பாபத்தைப் போக்கிக் கொள்கிறனர்; ஸ்வர்க்கத்தை அடைகின்றனர். புலனடக்கம் மிகக் கடினமானது ; புலனடக்கத்தில் எல்லாம் நிலைபெற்றுள்ளது. ஆகையால் புலனடக்கத்தைச் சிறந்த ஸாதனமாகக் கூறுகின்றனர்.*

*(மஹாநாராயண உபநிஷத் 79:4)*

# ப்ரபோத சிந்தாமணி

*ஸ்ரீ எஸ். ராமசந்திர ஐயர்*

## 2. நமக்கு நாமே சிற்பிகள்

நம்மைச் சுற்றியுள்ளவர்கள் எப்பொழுதும் அவரவர் கஷ்டங்களையே நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்கள். சிலர் தாம் பிறந்ததிலிருந்து இது நாள்வரை வெறும் துன்பங்களையே அனுபவித்துக் கொண்டு வருவதாகவும், சுகங்களை அனுபவித்ததே இல்லை என்றும் கூறி கடவுளையே திட்டிக் கொண்டும் இருப்பார்கள்.

மனிதனுக்கு வயது கூடக்கூட துக்க சிந்தனைகளும் அதிகமாகின்றன. இந்த துக்கம் நமக்கு எதனால் ஏற்படுகிறது? நம்முடைய அறியாமையாலேயே உண்டாகிறது. இதற்காக பகவானை நிந்தனை செய்வது மூடத்தனம் அல்லவா!

பகவான் நமக்கு விவேகம், ஆராய்ந்துணரும் சக்தி எல்லாம் கொடுத்துள்ளார். அதைச் சரியாக உபயோகித்தால் துக்கமே இருக்காது. நம்முடைய சுயநலம், பேராசை, விவேகமின்மை, கோபம், ஒழுக்கமின்மை இவைகளாலேயே நமக்குத் துன்பங்கள் உண்டாகின்றன.

மனிதன் தன் தகுதியை உணர்ந்து கொள்ளாமல் பிறரைப் போல் வாழ ஆசைப்படுகிறான். தன் சக்திக்கும் மீறி கடன் வாங்கி ஆடம்பர வாழ்க்கையினால் பட்ட கடனுக்கு வட்டி கட்ட முடியாமல் கஷ்டப்படுகிறான். இதற்கு யார் பொறுப்பு?

ஒவ்வொருவரும் தமது சுக துக்கத்திற்குக் காரணமான சிற்பிகளாவர். நம்மை விட கீழான நிலையில் இருப்பவரைப் பார்த்து நம் ஜீவிதத்தை நன்றாக நடத்த முடியாதா ? எவ்வளவு செல்வந்தனாக இருந்தாலும் அவனைவிட மேலான நிலையில் உள்ளவரைப் பார்த்துப் பொறாமைப்பட்டால் அவன் எப்பொழுதும் தரித்திரன் தான்.

**அதோ஽த: பச்யத: கஸ்ய மஹிமா நோபசீயதே ।**
**உபர்யுபரி பச்யந்த: ஸர்வ ஏவ தரித்ரதி ॥**

நம் சுகதுக்கத்திற்கும், கஷ்ட நஷ்டம், மற்றும் நோய் நொடிகளுக்கும் நாமே காரணம். பகவான் அளித்துள்ள விவேகத்தை பயன்படுத்தி உத்தமச் சிற்பிகளாக நாமும் சந்தோஷமாக வாழ்ந்து மற்றவர்களையும் சந்தோஷப்படுத்துவோமாக.

# சாணக்ய ஸுபாஷிதம்

**இவளுக்கு**

**ஆஹாரோ த்விகுண: ஸ்த்ரீணாம் புத்திஸ்தாஸு சதுர்குண:**
**ஸாஹஸம் ஷட்குணம் சைவ காமஸ்ச்ச அஷ்டகுண: ஸ்ம்ருத: ॥**

*பெண்களுக்கு உணவு இரு மடங்காகும், புத்தியோ நான்கு குணமாகும், வீரம் ஆறு குணமாகும், காமமோ எண் குணமாகும்.*

**சமத்காரம்**

**அத: பஸ்யஸி கிம் வ்ருத்தே பதிதம் தவ கிம் புவி**
**ரே ரே மூர்க்க ந ஜானாஸி கதம் தாருண்ய மௌக்திகம் ॥**

*அரசகுமாரர்களுக்கு வினயத்தையும், பண்டிதர்களுக்கு சுபாஷிதத்தையும், சூதாடுபவர்களுக்கு பொய்யையும், பாசாங்கை பெண்களுக்கும் சொல்லவும்.*

**இதைவிட அது மேல்**

**வரம் ந ராஜ்யம் ந குராஜ ராஜ்யம் வரம் ந மித்ரம் ந குமித்ரமித்ரம்**
**வரம் ந சிஷ்யோ ந குசிஷ்யசிஷ்யோ வரம் ந தாரா ந குதாரதாரா: ॥**

*கிழவியே கீழே என்ன வீழ்ந்து விட்டது? அடே மூர்க்கனே வீழ்ந்தது என் இளமை முத்து.*

**விட்டு விடு**

**நிர்தனம் புருஷம் வேஸ்யா ப்ரஜா பக்னம் ந்ருபம் த்யஜேத்**
**ககா வீதபலம் வ்ருக்ஷம் புக்த்வா சாப்யகதோ க்ருஹம் ॥**

*தனம் இல்லா புருஷனை கணிகை விடுவாள். தோற்ற அரசனை மக்கள் விடுவர். பழமில்லா மரத்தை பறவைகள் விடும். உண்டபின் அதிதி வீட்டை விடுவான்.*

**க்ருஹீத்வா தக்ஷிணம் விப்ராஸ்த்யஜந்தி யஜமானகம்**
**ப்ராப்தவித்யா குரும் சிஷ்யா தக்தாரண்யம் ம்ருகாஸ்ததா ॥**

*தக்ஷிணை பெற்றபின் அந்தணன் யஜமானனை விடுவான். கல்வி கற்றபின் குருவை சிஷ்யன் விடுவான், எரியும் கானத்தை பக்ஷிகள் விடும்.*

**யாருக்கு?**

**ராஜா ராஷ்டர்க்ருதம் பாபம் சிஷ்யபாபம் புரோஹித:**
**பர்தா ஸ்த்ரீக்ருதம் பாபம் புங்க்தே நைவாத்ர சம்சய: ॥**

*ப்ரஜைகளின் பாபம் அரசனைச் சாரும், சிஷ்யனின் பாபம் புரோஹிதனைச் சாரும், மனைவியின் பாபம் கணவனைச் சாரும். இதில் எந்த ஐயமுமில்லை.*

**எது எதைக் கொடுக்கும்?**

**தீபோ ப்க்ஷயதே த்வாந்தம் கஜ்ஜலஞ்ச ப்ரஸூயதே**
**யதன்னம் பக்ஷயதே நித்யம் தாத்ருசீ ஜாயதே ப்ரஜா : நச**

*இருளை ஒழிக்கும், தீபம் கரியை உமிழும். அதுபோல் எந்த அன்னத்தை நித்யம் உண்ணுகிறோமோ அதுபோல் ப்ரஜைகள்.*

**ஸஹஜம்**

**தாத்ருத்வம் ப்ரியவக்த்ருத்வம் தீரத்வம் உசித க்யாதா**
**அப்யாசேன ந லப்யந்தே சத்வார ஸஹஜா குணா: ॥**

*கொடை, இன்சொல், வீரம், உசிதம், அறியும் தன்மை இவை ஸஹஜமாக வர வேண்டும். சொல்லிக் கொடுத்தால் வாரா.*

**யாருமில்லை**

**கஸ்ய தோஷ:குலே நாஸ்தி வ்யாதினா கே ந பீடித:**
**வ்யஸனம் கேன ந ப்ராப்தம் கஸ்ய சௌக்யம் நிரந்தரம் ॥**

*எந்த குடும்பத்தில் தோஷமில்லை ! வ்யாதியினால் எவன் பீடிக்கப்படுவதில்லை யாருக்குக் கஷ்டமில்லை? யாருக்குத்தான் சௌக்யம் நிரந்தரம்?*

**த்வேஷம்**

**மூர்க்காணாம் பண்டிதா த்வேஷ்யா அதனானாம் மஹாதனா:**
**துர்பாக்யஞ்ச ஸுபகா: குலடானாம் குலாங்கனா: ॥**

*மூர்க்கனுக்கு பண்டிதனுடன் த்வேஷம், ஏழைக்கு பணக்காரனுடன் த்வேஷம், துர்பாக்யனுக்கு சௌபாக்யனிதத்தில் த்வேஷம், கணிகைக்கு பதிவ்ரதையிடத்தில் த்வேஷம்.*

*(தொடரும்)*

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

ஸ்ரீ விஜயராகவ கனபாடிகள்



'துர்லபம் த்ரியமேதத் தைவானுக்ரஹ ஹேதுகம்
மனுஷ்யத்வம் முமுக்ஷுத்வம் மஹாபுருஷ ஸம்ஸ்ரய:'

மனிதனாகப் பிறத்தல், மோக்ஷத்தை நாடுதல், மகா புருஷர்களை அண்டியிருத்தல் இவை மூன்றும் துர்லபம். தெய்வ அனுக்ரஹத்தாலேயே கிடைக்கும்.

நம் நாட்டில் வைதிக தர்மத்தை வளர்த்து வருபவர் மகாபெரியவா. அவர் சொல்படி நடப்பது அனைவருக்கும் க்ஷேமம். எனக்கு அவரது அருளால் 1965ஆம் ஆண்டு ஸ்ரீ மடத்திலேயே உபநயனம் ஆகி பின்பு காஞ்சி வைகாய் நல்லூர் பாட சாலைகளில் சுக்ல யஜுர் வேதம் கனாந்தம் பாடமாயிற்று. பின்பு மயிலை ஸம்ஸ்க்ருத கல்லூரியில் வேதாந்தம் பயின்றபின் அதே கல்லூரியில் அத்யாபகராக இன்று இருப்பது அவருடைய அருளால் தான் என்றால் மிகையாகாது. அவருடைய அத்புதமான மொழிகளை காது குளிர கேட்பது ஒரு சுகானுபவம்.

ஒரு சமயம் பெரியவா ஹகரி என்னுமிடத்தில் இருந்தார். அப்போது பேசிக் கொண்டிருக்கையில் எல்லோரும் மற்றவர்களுக்கு ஹிதத்தைச் சொன்னால் நல்லதும் அஹிதத்தைச் சொன்னால் கெடுதலும் வரும் என்பார்கள். ஆனால் ஹிதம் சொன்ன ரிஷி மாண்டே போனார் என்று கதை சொன்னார்.

ஏரண்டகர் பெரிய மகரிஷி. ஒரு சமயம் அவர் இருந்த தேசத்தில் துர்பிக்ஷம் வர தார்மிகமான ராஜா காவேரி நதியை ப்ரயாசப்பட்டு தன் தேசத்திற்கு வரவழைத்தான். அப்படி வந்த காவேரியும் ஒரு பிலத்தில் மறைஞ்சுட்டுது. அந்த ராஜா கவலையுடன் இந்த ரிஷியிடம் வந்து காவேரி வெளியே வருவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று கேட்க அவரும் ‘ராஜ லக்ஷணங்களுடன் கூடிய அரசனோ ஒரு ஞானியோ தன்னை இந்த பிலத்தில் த்யாகம் செய்யணும் காவேரி மேலே வருவாள் என்றார். அரசனும் மக்களுக்கு நல்லது நடக்கணும்னா நான் என்னைத் த்யாகம் செய்கிறேன் என்றான். ரிஷி : சொன்னார். அப்பா நீ இருந்தாயேன்றால் மக்களுக்கு பல க்ஷேமங்களைச் செய்வாய். உனக்குப் பதிலாக நான் இறங்குகிறேன். ஜலம் கெடெச்சுடும் என்று சொல்லி பிலத்தில் இறங்கினார்.

காவேரியும் வெளியே வந்தது. அவனுக்கு நல்லது சொல்லப்போய் தன்னையே த்யாகம் செய்ய நேரிட்டது. அதனால் இந்த ரிஷியோட கதையைச் சொல்லி ஹிதமோ அஹிதமோ பிறருக்கு நாம் சொல்லக் கூடாது என்று ஒரு ஸ்லோகம் இருக்கு என்று ஸ்லோகத்தைக் கூறினார் பெரியவா.

**‘‘ஹிதம் ந வாச்யம் அஹிதம் ந வாச்யம் ஹிதஹிதே நைவ வதேத் கதாபி**
**ஹிதஸ்ய வக்தாபி விபத்திமேதி ஹி ஏரண்டகோ நாம பிலம் ப்ரவிஷ்ட: ။’’**

நல்லதோ, கெட்டதோ எதுவும் சொல்ல வேண்டாம். நல்லதைச் சொன்ன ஏரண்டகர் பிலத்தில் மறைந்தார்..

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

**ஓம் ஜீவாத்மதத்த்வவிதே வேதாந்தபாஸ்கராய நம:**

**பூர்ணமேவ பரம் ப்ரஹ்ம ப்ராவிசத் தேஹமீத்ருசம்**

**ஆத்மரூபேண ஜீவேன ஸ்ருஷ்ட்வா வேதாந்தபாஸ்கர: ।**

பூரணமாய் இருக்கக் கூடிய பரப்பிரம்மமே இந்த சரீரத்தை உருவாக்கி, தானே ஜீவாத்மாவாக அதனுள் புகுகிறான்.

## 23. ஜீவர்களும் பரப்பிரம்மமே

**ஸேயம் தேவதா ஐக்ஷத, ஹந்தாஹம் இமா: திஸ்ரோ தேவதா:**
**அனேன ஜீவேனாத்மனா அனுப்ரவிச்ய நாமரூபே வ்யாகரவாணி இதி !**

**சாந்தோக்யோபநிஷத் 6-3-2**

*அந்த பரதேவதையே, 'நான் இப்பொழுது இந்த மூன்று தேவதைகளாகி, இந்த ஜீவன் எனப்படும் உருவத்தின் மூலம் (சரீரத்தில்) பிரபஞ்சத்தில் பிரவேசித்து, நாமரூபங்களாக ''வெளிப்படுகிறேன்'' என்று யோசித்தது.*

பரப்பிரம்மத்துக்கே பராதேவதை என்று பெயர். இந்த ஜகத்தை உருவாக்கி ஜீவரூபத்தின் மூலம் உலகத்தில் பிரவேசித்து, நாமரூபங்களாகத் தெரியக் கூடியது பரப்பிரம்மமேதான். அசேதனமான பிரதானம் அல்ல. கபிலருடைய சாங்கிய தத்துவத்தில் சொல்லியிருக்கக் கூடிய அசேதனமான பிரதானத்தை ஜகத்திற்கு காரணம் என்று வேதாந்தம் ஒப்புக் கொள்ளவில்லை. உபநிஷத்களில் ஸகல பிராணிகளுக்கும் ஆத்மாவாகி இருக்கக் கூடிய, சின்மாத்ர சொரூபனான பரப்பிரம்மத்தையே ஜகத்காரணம் என்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

நெருப்பு, தண்ணீர், உணவு என்ற மூன்று பூதங்களைப் படைத்து, அதன் மூலம் பிரபஞ்சத்தையும் படைத்து, பரப்பிரம்மமே ஜீவ ரூபங்களாகவும் வெளிப்படுகிறது. சம்சாரிகளாகிய ஜீவர்களாய் தோன்றக் கூடியதும் பரப்பிரம்மமே. ஜீவர்களும் பரப்பிரம்ம சொரூபமேதான்.

॥ ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ॥

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

*ஓம் 'இவ'காரதத்த்வவிதே வேதாந்தபாஸ்கராய நம:*

**ஆத்மைவேதம் ஜகத் ஸர்வம் ஆத்மபின்னமிவ ஸ்திதம் ।**

**பூர்ணே பின்னமிவேதம் த்வவித்யா வேதாந்தபாஸ்கர: ॥**

ஆத்மாவிலிருந்து வேறாகக் காணக் கூடிய இந்த ஜகம் எல்லாம் ஆத்மனே. பூரணமான ஆத்மாவில், வேறுபாடுகள் தோன்றுவது அவித்யையினாலேயாகும்.

## 24. 'இவ'காரத்தின் மகிமை

**யத்ர வா அன்யதிவ ஸ்யாத் தத்ர அன்யோ அன்யத் பச்யேத் ।**

**ப்ரஹதாரண்யகோபநிஷத் 4-3-31**

*'இவ' என்றால் எங்கு வேறுபாடுகள் இருப்பதுபோல் தோன்றுகிறதோ, அங்கு ஒருவன் மற்றொருவனைக் காண்கிறான்.*

இந்த மந்திரம், ஆத்மாவிலிருந்து வேறான துவைத பொருளை, அன்யதிவ என்றே சொல்கிறது. உண்மையில் எல்லாம் ஆத்மாவே ஆகியிருக்கிறது. சரியாக விசாரம் செய்து பார்த்தால், ஆத்மாவைத் தவிர வேறான துவைத பொருட்கள் இல்லவேயில்லை. ஆத்மாவே, அனாத்ம பொருள்களாக அஞ்ஞானிகளுக்குத் தெரிகிறான். கனவில் தான் ஒருவன் மட்டுமே இருந்தபோதிலும், தன்னிலிருந்து வேறான அனேக பொருட்களைக் காண்கிறான் இல்லையா ? அவை, அவனிடமிருந்து வேறானது போல் தோன்றினாலும் அங்கு (கனவில்) எதுவும் இல்லை.

இவ்வாறு விழிப்பு நிலையில் துவைதம் இருப்பது போல் காண்கிற பொழுது அங்கே, பிரமாத்ரு (பார்க்க கூடியவன்) பிரமாணம் (கண்) பிரமேயங்கள் (தெரியும் பொருட்கள்) காணப்படுகின்றன. ஞான திருஷ்டியினால் பார்த்தால் ஆத்மாவைத் தவிர எதுவும் இல்லை. ஆத்மாவே பிரபஞ்சம் என்பதும் அறிவாகும்.

॥ ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ॥

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலம் மட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
**டாக்டர். வே. ராகவன்** - தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் : **ஜயவிஜயா**

## ஆஸ்வமேதிக பர்வம்



பீஷ்ம பிதாமஹர் இறந்தபின் அவருக்கு செய்ய வேண்டிய நீர்க்கடன் களை தர்மர் செய்தார். நீர்வழியும் கண்களுடனும் கனத்த மனத்துடன் இருந்த அவரை க்ருஷ்ணர் சமாதானம் செய்தார்.

மனுவைப்போலவும் ராமரைப் போலவும் தன் தம்பிகளுடன் அரசை செவ்வவனே ஆண்டார். அவரது ஆட்சியில் அதர்மம் எதுவுமில்லை.

மக்களும் தர்மத்தை அனுசரித்தனர். அஸ்வத்தாமனால் முடக்கப்பட்ட அந்த சிசுவை சுபத்ரா க்ருஷ்ணன் முன் வைத்து இதை உன்னிடம் ஒப்படைக்கிறேன். அபிமன்யுவின் பிள்ளையை ஜீவிக்கச்செய் என்றாள்.

எல்லோரும் பார்க்கையிலேயே இந்த சிசுவை உயிர்ப்பிக்கிறேன். சத்யமும், தர்மமும் என்னிடம் இருக்குமானால் இந்த சிசு பிண்டம் எழட்டும்' என்று க்ருஷ்ணர் கூற அதுவும் உயிபெற்று எழுந்தது.

சில காலம் சென்ற பின் தர்மருக்கு அஸ்வமேதம் செய்ய ஆவலுண்டாயிற்று அர்ஜுனன் நகுல சகாதேவர்கள் பீமன் குதிரையைக் கொண்டு திக் விஜயம் செய்ய தர்மரும் அஸ்வமேத யாகத்தை முடித்தார். அது முடிந்ததும் க்ருஷ்ணர், த்ருத ராஷ்டிரர், காந்தாரி, விதுரர், த்ரௌபதி, வ்யாஸர் முதலானவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு துவாரகைக்குப் பயணம் ஆனார். யுதிஷ்டிரரின் மாளிகையிலிருந்து வெளிப் போந்தார். அப்போது அவரது தேரை கடிவாளங்களை தர்மர் பிடிக்க, அர்ஜுனன் கவரி வீச, பீமன் வெண்குடை தாங்க நகுல சஹாதேவர்கள், கானமிசைக்க தேரில் க்ருஷ்ணர் ஏறினார்.

*மூன்று யோஜனை சென்றபின் பாண்டவர்கள் நமஸ்கரிக்க அவர்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு த்வாரகைக்கு க்ருஷ்ணர் ஏகினார். தர்ம புத்ரர் க்ருஷ்ணரை மனதில் த்யானித்தவராய் அவரது பக்தனாகி அவரது ரூபத்திலேயே தன் மயப்பட்டு அரசாட்சி செய்தார்.*

ஆஸ்வமேதிக பர்வம் முற்றும்

## ஆஸ்ரமவாஸிக பர்வம்

*சத்ருக்களை வென்ற பாண்டவர்கள் த்ருதராஷ்டிரனை தலைவனாக வைத்து அரசாட்சி செய்தனர். பதினைந்து வருடங்கள் கழிய வாழ்க்கையில் விரக்தி கொண்டு வானப்ரஸ்தனாய் காடு செல்ல விரும்பினான்.*

*அவனுடன் விதுரரும் காடு செல்ல விரும்பினார். அரசனுடன் சஞ்சயன் விதுரர் காந்தாரி, குந்தி முதலானோரும் காடு சென்றனர். காட்டில் வ்யாஸரிடம் தீக்ஷை பெற்று த்ருதராஷ்டிரன் ஸத்யயூபன் என்னும் ரிஷியின் ஆஸ்ரமத்தில் த்யான யோகத்தைத் தொடங்கினான். கூட வந்தவர்களையும் அதில் ஈடுபடுத்தினான்.*

*அவர்கள் வனம் சென்ற பின் பாண்டவர்கள் துக்கத்துடன் இருந்தனர். அனைவருக்கும் விரக்தி வந்தது. மிகவும் துக்கித்த பாண்டவர்கள் காட்டில் வசித்து வரும் அரசனைக் காண ஒரு நாள் வந்தனர். தூரத்திலிருந்தே விதுரரைப் பார்த்த தர்மர் ' நான் யுதிஷ்டிரன்' என்று கூறி வணங்கினார். தன்னுடைய யோக மகிமையால் விதுரர் தர்மரின் உடலில் புகுந்தார். மாண்டவ்ய ரிஷியின் சாபத்தால் தர்ம தேவதை விதுரராகப் பிறந்தார். அதே தேவதையின் சக்தியினால் தர்மராகவும் பிறந்தார். எனவே தர்மர் விதுரராவார். விதுரர் யுதிஷ்டிரனாவார்.*

*யுதிஷ்டிரன் தம்பிகளுடனும் தன் பரிவாரங்களுடனும் ஹஸ்தினாபுரம் வந்தார்.*

*சில நாட்கள் கழித்து நாரத முனி தர்மரைப் பார்க்க வந்தார். நாரதர் தர்மரே! நீ வனம் சென்று அரசனைப் பார்த்துவிட்டு வந்தபின் காட்டில் பெரும் காற்று வந்து காட்டுத் தீயை எழுப்பியது. அதில் த்ருதராஷ்டிரனும், காந்தாரியும், குந்தியும் மடிந்தனர். ஸஞ்சயன் அங்கிருந்து இமயத்திற்குச் சென்று விட்டான். இதைக் கேட்ட தர்மர் மிகவும் துக்கித்தார். அவரைத் தேற்றிய பின் நாரதர் அங்கிருந்து மறைந்தார்.*

ஆஸ்ரமவாசிக பர்வம் முற்றும்.

# மூக ஸாரம்

இராமாயணம் ஸ்ரீநிவாஸன்

காஞ்சீ மடத்தை அலங்கரித்த ஸ்ரீ மூக கவியினால் இயற்றப்பட்ட மூக பஞ்சசதியை எல்லாரும் அறிவர். காமாக்ஷியின் புகழை பல விதமாக அதில் கவி கூறியிருப்பார் புலமை சிறந்த கற்பனை வளம், உயர்ந்த பக்தி இலக்கியமாக மிளிர்கிறது மூக பஞ்சசதி. அந்த ஐநூறு ஸ்லோகங்களிலிருந்து சில முக்யமான ஸ்லோகங்களை 'மூக ஸாரம்' என்னும் தலைப்பில் மறைந்த ஸ்ரீ ராமாயணம் ஸ்ரீநிவாசன் தொகுத்து அருளியுள்ளார். பொருள் உணர்ந்து பாரயணம் செய்வோம்.

नीलोऽपि रागमधिकं जनयन्पुरारेः–
लोलोऽपि भक्तिमधिकां दृढयन्नराणां।
वक्रोऽपि देवि नमतां समतां वितन्वन्
कामाक्षि नृत्यतु मयि त्वदपाङ्गपातः ॥१६॥

**कटाक्ष शतकम् ॥ १६**

**நீலோऽபி ராகம் அதிகம் ஜனயன் புராரே:**
**லோலோऽபி பக்திம் அதிகாம் த்ருடயன் நராணாம்।**
**வக்ரோऽபி தேவி நமதாம் ஸமதாம் விதன்வன்**
**காமாக்ஷி ந்ருத்யது மயித்வதபாங்கபாத:॥16॥**

**(கடாக்ஷ சதகம் 16)**

காமாக்ஷி! உம்முடைய கடைக்கண்ணோக்கங்களின் வீழ்ச்சியானது கரியதாயினும் த்ரிபுரத்தை அழித்த சிவனுக்கு காதலை (சென்னிறம்) அதிகமாக உண்டு பண்ணிக் கொண்டும் தான் ஏப்போதும் சலனமாயிருப்பினும் மனிதர்களுக்கு அதிகமான சஞ்சலமில்லாத பக்தியை உண்டு பண்ணுவதும் அருவியின் வீழ்ச்சிபோல் வளைந்ததாயிருப்பினும் வணங்குவோருக்கு ஸமதையை (எல்லோரையும் ஒன்றாக நோக்கும் தன்மை) உண்டு பண்ணிக் கொண்டும் நடன மேடை போன்ற என் மீது நடனம் செய்வதாக.

अत्यन्तशीतलमतन्द्रयतु क्षणार्धम्
अस्तोकविभ्रममनङ्गविलासकन्दम्।
अल्पस्मितादृतमपारकृपाप्रवाहम्
अक्षिप्ररोहमचिरान्मयिकामकोटि।।२४।।

कटाक्ष शतकम् ।। २४

**அத்யந்த ஸீதலம் அதந்த்ரயது க்ஷணார்த்தம்**
**அஸ்தோகவிப்ரமம் அனங்கவிலாஸகந்தம்।**
**அல்ப ஸ்மிதாத்ருதம் அபாரக்ருபா ப்ரவாஹம்**
**அக்ஷிப்ரரோஹம் அசிரான்மயிகாமகோடி।।24।।**

**(கடாக்ஷ சதகம் 24)**

மிகவும் குளிர்ந்ததாகவும், அதிக அழகும், சலனமுடையதாகவும், மன்மதனது பெருமிதத்திற்குக் காரணமானதும், புன்முறுவல் கொண்டதும், கரை கடந்த க்ருபையின் வெள்ளமாயும் விளங்கும் உன் கடாக்ஷம் அரைக் கண் பொழுது என் மீது பாய்வதாக.

**ஐந்துஅவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்**
**இந்திரனே சாலும் கரி**

*மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளின் வழியாகச் செல்லும் ஆசைகளைக் கட்டுப்படுத்தியவனது வல்லமைக்கு, பரந்த வானுலகத்தில் உள்ள தேவர்களுடைய தலைவனாகிய தேவேந்திரனே பொருத்தமான சான்று. (மண்ணுலகத்தில் ஐம்பொறிகளை வென்ற கௌதம முனிவரால் விண்ணுலக வேந்தனாகிய இந்திரன் சாபம் பெற்ற வரலாற்றின் வாயிலாக தவத்தின் மேன்மையை உணர்த்துகிறார்.*

*(குறள் : 25)*

*விந்துவைப் பாதுகாப்பவர், தவ வேள்வி புரிபவர், முறையாக உண்பவர். பொறிகளை நெறியான வழியில் செலுத்துபவர். அறக்கருணையும், மறக்கருணையும் உடையவர் (வரமும் சாபமும் கொடுக்கும் ஆற்றல் படைத்தவர்). வாய்மையாளர் - இவையனைத்தையும் பொருந்தியவரே ரிஷி எனப்படுவர். (ஸுபாஷிதம்)*